**கமெண்ட் கந்தர்...**

அப்படியெண்டா
இனி
வாயைக்கட்டி
வரியைக்
கட்டி
வாழவேணும்
என்னங்கோ?




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்




மலர்: 05, இதழ்: 145 குரோதி வருடம், மார்கழி மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(10.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 09, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12


## தோட்டத் தொழிலாளருக்கு 2000 அடிப்படை சம்பளம்



பட்ஜெட்டில் அறிவிக்க மனோ எம்.பி. கோரிக்கை

» 02 பக்கம்

# 2025ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூ.79,100 கோடி

## வரவு - செலவுத் திட்டம் சபைக்கு வந்தது

## செலவினமாக ரூ.4,69,100 கோடி ஒதுக்கீடு



2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் எனப்படும் வரவு - செலவுத் திட்டம் நேற்று (09) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனை முன்வைத்தார்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்பின்னர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எனப்படும் வரவு - செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை மீதான விவாதம் அடுத்த மாதம் 18 முதல் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 07 நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதனையடுத்து, அன்றைய தினம் அதாவது பெப்ரவரி 25ஆம் திகதி வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு சபையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 27 முதல் மார்ச் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு எனப்படும் குழுநிலை விவாதம் நடத்தப்படவுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பிற்பகல் சபையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் செலவீனமாக 4,69,100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் செலவினமாக 3,90,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2025ஆம் ஆண்டுக்கான செலவினம் 79,100 கோடி ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இந்த செலவினத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்காக 61,744 கோடியே 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## அரச பணியாளர் சம்பள உயர்வு

### அரசு அறிவிப்பு

''2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், அதிகரிக்கப்படும் தொகை தொடர்பில் தற்போது தெரிவிக்க முடியாது'' என பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ரவி கருணாநாயக்க எம்.பி. எழுப்பிய அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் சம்பளத்தை திட்டமிட்டபடி அதிகரித்தால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை மீறப்படும். அந்த நிபந்தனையின்படி 100:20 வீதத்தையே செலவிட முடியும். அதனை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறிருக்க, சம்பள அதிகரிப்பை அரசாங்கம் எவ்வாறு மேற்கொள்ளும்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த பிரதி அமைச்சர் மேலும் கூறுகையில்,

''சர்வதேச நாணய நிதியத்துடன் இது தொடர்பில் எந்தவொரு சிக்கலும் இதுவரை ஏற்படவில்லை. அந்த வகையில் எந்த பாதிப்பும் ஏற்படாது. அத்துடன் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளக்கூடாது என சர்வதேச நாணய நிதியம் எவ்விடத்திலும் தெரிவிக்கவில்லை.

நாட்டில் ஊழியர்கள் உழைக்கும்போது செலுத்தும் வரியை குறைக்குமாறு...

» 02 பக்கம்

## "தமிழன்" 14ஆம் திகதி இதழில் விசேட பஞ்சாங்கம்

## தேர்தலில் சொன்னவற்றை செய்ய முயற்சியுங்கள்!

### அரசாங்கத்துக்கு திலித் எம்.பி. சாட்டையடி



நா. தினுஷா

"அரசாங்கத்தின் குறுகிய நோக்கங்களுக்கு நான் இலக்காக மாட்டேன். சூட்சுமமாக எனக்கு எதிராக சேறு பூசுவதை நிறுத்திவிட்டு மக்களுக்கு...

» 02 பக்கம்






»03 பக்கம்

## ஞானசார தேரருக்கு 09 மாத சிறைத்தண்டனை



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு 09 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில், ஞானசார தேரர் இஸ்லாத்துக்கு எதிரான கடுமையான கருத்துகளை தெரிவித்திருந்தார்.

அதன்போது அவர் குறிப்பிட்ட "இஸ்லாம் ஒரு புற்றுநோய்,...

» 02 பக்கம்

## மின் கட்டணத்தை குறைப்பதாக சொல்லவில்லை

### வலுசக்தி அமைச்சர் குமார



''நாம் மின்கட்டணத்தை ஓரிரு நாட்களில் குறைப்பதாக ஒருபோதுமே வாக்குறுதியளிக்கவில்லை. 03 வருட காலத்துக்குள்...

» 02 பக்கம்



## உள்ளூராட்சி சட்டமூலம் சபையில் சமர்ப்பிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்திம அபேரத்ன, முதலாம் வாசிப்புக்காக சபைக்கு சமர்ப்பித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தலின்போது அவர் இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்தார்.

» 02 பக்கம்



## கொரிய ஒப்பந்தம் ஒழுங்கில்லை

### அமைச்சர் விஜித சாடல்

கொரிய பிராந்திய நகரபிதாவுடன் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைச்சாத்திட்டுள்ள E8 விசா தொடர்பான ஒப்பந்தம் முற்றாக சட்டவிரோதமானது. இந்த... » 02 பக்கம்

## பிரபல்யத்துக்காக செய்தி வெளியிடாதீர்

### அமைச்சர் நளிந்த வேண்டுகோள்



''பிரபல்யத்துக்காக மக்களை அச்சமூட்டும் வகையில் செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் HMPV வைரஸ் நோய் தொற்றாளர் எவரும் கண்டறியப்படவில்லை. இந்த வைரஸ் தொற்று...

» 02 பக்கம்

## பொய்யர்களின் அரசாங்கமிது

### கடுமையாக சாடும் தயாசிறி



''ஆட்சிக்கு வந்தவுடன் மின்கட்டணத்தை குறைப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மக்களுக்கு வாக்குறுதி யளித்தார். தற்போது அப்படிக் கூறவில்லை என்று கூறுகின்றார்கள். காலை முதல் இரவு வரை பொய்யை மாத்திரமே குறிப்பிடு கின்றீர்கள். இதனால் தான் இந்த அரசாங்கத்தை...

» 02 பக்கம்


## தற்போது விற்பனையில்

ஜூனியர் சிட்டு

பாலர் பாடசாலை சிறார்களுக்காக...



விலை ரூ.100/= மட்டுமே

அரச பாடத்திட்டத்திற்கு அமைவாக தொகுக்கப்பட்டு வெளிவருகிறது

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308/0741684643

## தேர்தலில்...

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். மேலும், தேர்தலுக்கு முன்னர் தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடியாது என்பதை அரசாங்கம் மக்களுக்கு தெளிவாக அறிவித்தால் அதுவே முதலாவது 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டமாக இருக்கும். அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் மக்கள் கடுமையாக விசனமடைந்துள்ளனர்" என்று சர்வசன அதிகாரம் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

பராளுமன்றத்தில் நேற்று (09) இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அறிவித்தல், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை ஆகியவை மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''இந்த பாராளுமன்றம் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடனான சபை என்பதை ஆளுங்கட்சி மற்றும் எதிர்த்தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். நானும் புதிய பாராளுமன்ற உறுப்பினர் என்பதுடன் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால், 49 நாட்கள் என்னால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புகளுக்கமைய இந்த பாராளுமன்றத்தினூடாக நேர்மறையான வாய்ப்பை ஏற்படுத்திகொடுத்துள்ளதா என்பதை சற்று சிந்தித்து பார்க்க வேண்டியுள்ளது. அரசாங்கத் தரப்பினர் தாம் தற்போது அரசாங்கத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டே செயலாற்றுகிறார்கள். எதிர்க்கட்சிக்குரிய பண்புகளையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்கள் நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதேபோன்று நானும் அரசாங்கத்தின் மீது பாரிய எதிர்பார்ப்பை வைத்துள்ளேன். பாரிய எதிர்பார்ப்புகளுடனேயே மக்கள் இருக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி கூறுவது போன்று இந்த நாட்டின் மீதான 75 வருட சாபத்தை சரிசெய்ய வேண்டுமெனில் அதனை சரி செய்யும் வகையில் கருத்து முன்வைக்காமல், மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய விடயங்களைப் பற்றி பேச வேண்டும். அதன் காரணமாகவே நாட்டு மக்கள் பாவமானவர்கள் என்று கூறுகிறேன். ஆனால், குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே மக்களின் எதிர்பார்ப்பை தூண்டும் வகையிலான வாக்குறுதிகள் முன்வைக்கப்பட்டன என்பதை ஆளுங்கட்சியினரும் அறிவார்கள். நாங்களும் அறிவோம்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஆளுந்தரப்பினர் நன்கு அறிந்து வைத்திருந்தால், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என்பதை ஆளுந்தரப்பினரும் அறிந்தே வைத்திருக்க வேண்டும். வருமானமின்றி செலவு செய்ய முடியாது. தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்று மக்களுக்கு உண்மையை வெளிப்படையாக கூறிவிட வேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஒரு அடி கூட முன்னேற்ற பாதையில் பயணிக்க முடியாது. உந்துதல் மிக்க தேசமொன்று எமக்கு அவசியமாகும். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய எதனையாவது நடைமுறைப்படுத்தி காட்ட வேண்டும்.

தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடியாது என்பதை மக்களுக்கு தெளிவாக அறிவித்தால் அதுவே முதலாவது கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டமாக இருக்கும். மக்கள் விசனமடைந்துள்ளனர். இன்னும் அரசாங்கத்துக்கு ஐந்து வருடங்கள் இருப்பதால் மக்களுக்கு கூறிய விடயங்களை நிறைவேற்றிக் காட்டுங்கள். என்டிஜன் தொடர்பிலும் பேச முடியும். 'தெரண' தொலைக்காட்சி தொடர்பிலும் பேச முடியும். 'அருண' பத்திரிகை தொடர்பிலும் பேச முடியும். பேச முடியாமல் இல்லை. ஆனால், அதற்கு அப்பால் நாட்டின் மாற்றத்துக்கான திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். ஆளுங்கட்சியினரை போன்று பாராளுமன்ற உணவகத்துக்கு சென்று உணவு உண்பதற்காக நான் பாராளுமன்றத்துக்கு வரவில்லை. மக்களுக்காக என்னால் முடிந்த ஏதாவது நன்மை செய்வதற்காகவே பாராளுமன்றம் வந்துள்ளேன்.

அரசாங்கத்துக்கு சரியான வேலைத்திட்டம் இல்லை. கிளீன் ஸ்ரீ லங்கா என்று கூற முச்சக்கரவண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பொருட்களை அகற்றுவது மாத்திரமே இந்த அரசாங்கத்தால் செய்ய முடியும். மக்களின் கனவுகளை அடியோடு ஒழிப்பது மாத்திரமே உங்களால் முடியும். மக்களின் கனவுகளுக்கு உயிர்கொடுக்க இந்த அரசாங்கத்தால் ஒருபோதும் முடியாது. நாளாந்த வாழ்க்கை தொடர்பான புரிந்துணர்வோ வரவு-செலவு தொடர்பிலான புரிந்துணர்வோ இந்த அரசாங்கத்துக்கு இல்லை.

முன்னுதாரணமாக மாற்றத்துக்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை. என்டிஜன் தடுப்பூசி தொடர்பில் தகவல்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில் சுகாதார அமைச்சரிடம் விளக்கம் கேளுங்கள். இந்த கேள்விக்கு சுகாதார அமைச்சரே விளக்கமளித்திருக்கிறார். 1,146.22 ரூபாவுக்கு மாத்திரமே விற்பனை செய்யப்பட்டுள்ளதாக உங்களின் அமைச்சரே இந்த சபையில் கூறியிருக்கிறார்கள். ஹன்சாட் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஹன்சாட் அறிக்கையை நன்கு வாசித்துவிட்டு என்னிடம் கேள்வி கேளுங்கள்.

பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டு சூட்சுமமாக சேறு பூசும் திட்டத்தை அரசாங்கத் தரப்பு ஆரம்பித்துள்ளது. அருண பத்திரிகை என்பது 'தெரண' தொலைக்காட்சியின் இணை ஊடகம். ஆனால், அரசாங்கத்துக்கு தெரண தொலைக்காட்சி சிறந்து விளங்குகிறது. அருண பத்திரிகை இந்த அரசாங்கத்துக்கு தவறான பத்திரிகையாகிவிட்டது. தற்போது 'த மோர்னிங்' பத்திரிகையும் சிறப்பாகிவிட்டது. பால் சமத்துவம் தொடர்பில் பேசும் 'பல்ஸ்' ஊடகமும் எனக்கு சொந்தமானதே. அந்த ஊடகமும் தற்போது இவர்களுக்கு நன்றாகிவிட்டது. தெரண நட்பாக இருக்கும்போது அருண எவ்வாறு எதிராக முடியும்.

நானும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். இருந்தாலும் தேசிய மக்கள் சக்திக்கான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளோம். அந்த கௌரவத்தையாவது கொடுக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரங்களுக்கு வந்த மக்கள் தொகையை ட்ரோன் கெமராக்களினூடாக பதிவு செய்யப்பட்ட வீடியோக்களை எனது ஊடகமே மக்களுக்கு வெளிப்படுத்தியது.

உங்களின் குறுகிய நோக்கங்களுக்கு இலக்காக மாட்டேன். இருந்தபோதும் சேறு பூசல்களை நிறுத்திவிட்டு மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். சேறு பூசல்களுக்காகவும் இவர்களின் தேவைகளுக்காகவும் என்னால் கட்டியெழுப்பப்பட்ட எனது சாம்ராச்சியத்தை கைவிட மாட்டேன்'' என்று சுட்டிக்காட்டினார்.

## பிரபல்யத்துக்காக...

தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது'' என சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின்போது ஆளுந்தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாந்த சமரவீர எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

''பொருளாதார பாதிப்பின் காரணமாக வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால் சுகாதாரத்துறை கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதற்கமைய 2022 -2024 வரையான காலப்பகுதியில் பெருமளவிலான விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட சுகாதார சேவையாளர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள், அல்லது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

நாட்டை விட்டு வெளியேறியுள்ள மற்றும் சேவையில் இருந்து விலகிய வைத்தியர்கள், சுகாதார சேவையாளர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பரவும் HMPV வைரஸ் நோய் தொற்று தாக்கத்துடன் இலங்கையில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஒருசில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கை மருத்துவ சபையில் நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேராசிரியர் நிலிகா மலவிகே கடந்த காலங்களில் இலங்கையில் இந்த வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டிருந்ததாக குறிப்பிட்டிருந்தார். இந்த விடயத்தை முழுமையாக திரிபுபடுத்தி தற்போது அந்த நோய் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளன. தமது பிரபல்யத்துக்காக மக்களை அச்சமூட்டும் வகையில் செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த வைரஸ் தொற்று பரவல் தொடர்பில் நாட்டில் 20 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நோய் அறிகுறியுடன் அடையாளம் காணப்பட்ட நபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக்கு அமைய அந்த நபர் HMPV வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று பரவல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அவதானத்துடன் செயற்படுகிறோம். ஆகவே ஊடகங்கள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக மக்களை அச்சமூட்டும் வகையில் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

## 2025ஆம்...

கடந்த 2024ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்காக 56,445 கோடியே 85இலட்சம் ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2025ஆம் ஆண்டுக்காக 5,298 கோடியே 65 இலட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார வசமுள்ள பாதுகாப்பு அமைச்சு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகிய 03 அமைச்சுகளுக்குமாக மொத்தம் 11,6980கோடியே 05 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியதையடுத்து, 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த 2024ஆம் ஆண்டில் ஜனாதிபதி செலவினமாக 660 கோடியே 11,50,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2025 ஆம் ஆண்டுக்கு ஜனாதிபதி செலவினமாக 297,49,80,000 ரூபாவும் பிரதமர் செலவினமாக 2024ஆம் ஆண்டு 115 கோடியே 5,000,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2025 ஆம் ஆண்டுக்கு 117,0000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஏனைய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவினங்கள் வருமாறு,**

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு - 13,725,000,000ரூபா, பௌத்த அலுவல்கள் திணைக்களம் - 3,563,000,000 ரூபா, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் - 210,000,000ரூபா, கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்- 270,000,000ரூபா, இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் - 300,000,000ரூபா, நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - 714,177,500,000ரூபா, பாதுகாப்பு அமைச்சு - 442,000,000,000ரூபா, நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாட்டு அமைச்சு - 54,106,500,000ரூபா, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - 508,499,998,000ரூபா, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு - 21,463,000,000ரூபா, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - 2,564,000,000ரூபா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு - 473,410,000,000ரூபா, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு- 208,722,000,000ரூபா, வலுசக்தி அமைச்சு - 21,142,000,000ரூபா, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு - 101,282,000,000ரூபா, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - 30,050,000,000ரூபா, கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு- 271,000,000,000ரூபா, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - 496,500,000,000ரூபா, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு - 16,738,000,000ரூபா, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு - 13,443,000,000ரூபா, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு - 11,440,000,000ரூபா, சுற்றாடல் அமைச்சு - 16,040,000,000ரூபா, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு - 14,526,000,000ரூபா, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு - 13,623,000,000ரூபா, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு - 175,445,000,000ரூபா, தொழில் அமைச்சு - 6,070,000,000ரூபா, இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு - 12,100,000,000ரூபா, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு - 5,000,000,000ரூபா.

இதேவேளை, 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத்திட்ட உரை) பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரை 07 நாட்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி மாலை 06 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதிவரை 04 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பை மார்ச் 21ஆம் திகதி மாலை 06 மணிக்கு நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்ட காலப்பகுதியில் காலை 9.30 மணிமுதல் 10 மணிவரையான நேரம் 05 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், காலை 10 மணி முதல் மாலை 06 மணி வரையான காலப் பகுதியில் வரவு - செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும். வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 06 மணி முதல் 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

## கொரிய...

ஒப்பந்தத்தில் கொரிய பிராந்தியத்தின் நகரபிதா பாகிஸ்தானுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் ஒரு சில இடங்களில் இலங்கை என திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களில் பாகிஸ்தான் என்றே இருக்கிறது. அதைக்கூட பார்க்காமலே கைச்சாத்திட்டிருக்கிறார்'' என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது அரச தரப்பு எம்.பி. லக்மாலி ஹேமசந்திரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

E8 விசா தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டவிரோதமானது. 2024 ஏப்ரல் 26ஆம் திகதி அப்போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த மனுஷ நாணயக்கார இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். இந்த ஒப்பந்தத்தில் இலங்கை சார்பாக அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் கொரிய நாட்டின் வந்தோ பிராந்தியத்தின் நகரபிதாவும் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் கீழே கொரிய தூதரகத்தினால் E8 விசா விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் தூதரக காரியாலயத்தை கொரிய நீதி அமைச்சே அறிவுறுத்த வேண்டும்.

என்றாலும், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இல்லை. ஆனால் தொழில் அமைச்சில் முறையற்ற வகையில் இருந்து தேடி எடுத்தேன். இந்த ஒப்பந்தம் மிகவும் நகைப்புக்குரியது. அரசாங்கம் ஒன்றின் அமைச்சர் ஒருவர் இதில் கைச்சாத்திட்டிருப்பதும் வரலாற்று முக்கியத்துவமானது. இந்த ஒப்பந்தத்தின் தலைப்பில் இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையிலான ஒப்பந்தம் என தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் அதன் உள்ளடக்கத்தில் கொரியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி இல்லை.

இந்த ஒப்பந்தத்தில் கொரிய பிராந்தியத்தின் நகரபிதா பாகிஸ்தானுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் ஒரு சில இடங்களில் இலங்கை என திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களில் பாகிஸ்தான் என்றே இருக்கிறது. அதைக்கூட பார்க்காமலே கைச்சாத்திட்டிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கொரியாவுக்கு தொழிலுக்கு செல்பவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அவர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கமே நஷ்டஈடு வழங்க வேண்டும். அதனால் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடும்போது குறைந்தபட்சம் வாசித்துகூட பார்க்காமலே கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. முன்னாள் அமைச்சர் கைச்சாத்திட்டிருக்கும் இந்த ஒப்பந்தம் முற்றாக சட்டவிரோதமானது. இந்த ஒப்பந்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பது எமது நாட்டு இளைஞர் யுவதிகளாகும். அவர்களுக்கு விசா கிடைக்கும்போது கொரியாவுக்கு செல்ல முயற்சிக்கின்றனர். ஆனால் இது சட்டவிரோதமானது என்பதால் அவர்களுக்கு செல்லமுடியாது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் எமது இளைஞர் யுவதிகளை கொரியாவுக்கு தொழிலுக்கு அனுப்பமுடியாது. அவ்வாறு அங்கு சென்று ஏதாவது பிரச்சினைகளுக்கு ஆளாகினால் அதுதொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு தலையிடுவதற்கு சட்ட ரீதியான உரிமை இல்லை.

இந்த விசாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க எமது அமைச்சு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும். அதேநேரம் E9 மற்றும் E7 விசா முறையின் கீழ் கொரிய தொழிலுக்கு இளைஞர் யுவதிகளை அனுப்பும் நடவடிக்கை இடம்பெறுகிறது. எனவே கொரிய தொழில் பெற்றுத்தருவதாக ஏமாற்றி பணம் அறவிடும் முகவர் நிறுவனங்களிடம் யாரும் ஏமாறவேண்டாம்'' என்றார்.

## தோட்டத் தொழிலாளருக்கு...

''2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும். பெருந்தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் தரப்பினரும் தொழிற்சங்கங்களும் இந்த யோசனைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்'' என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பியான மனோ கணேசன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அத்தியாவசிய உணவு பொருட்கள் விலையேற்றம், தட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே இந்தக் கோரிக்கையினை விடுத்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

''பெருந்தோட்ட மக்கள் பொருளாதார பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளதுடன், காணி, வீட்டு உரிமையின்றி புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை தேவைகளில் இருந்தும் புறக்கணிக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். உலக உணவு தாபனம், செஞ்சிலுவை சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் பெருந்தோட்ட மக்கள் இன்றும் பின்னடைந்த சமூகமாகவே வாழ்கிறார்கள். ஆகவே இவர்கள் குறித்து கரிசனை கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த காலங்களில் எம்முடன் இணக்கமாக செயற்பட்டார். கடந்த பாராளுமன்றத்தில் பெருந்தோட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து சபை ஒத்திவைப்பு பிரேரணையை நான் முன்வைத்தபோது அதனை அநுரகுமார திசாநாயக்க வழிமொழிந்தார். ஆகவே மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு புதிதாக குறிப்பிட வேண்டிய தேவையும் கிடையாது.

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கமைய பெருந்தோட்ட மக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். கடந்த அரசாங்கம் 900 ரூபா சம்பள அதிகரிப்பையும் இடைக்கால அரசாங்கம் 1,700 ரூபா சம்பள அதிகரிப்பையும் வழங்கியது. இருப்பினும், 1,300 ரூபாவே கிடைக்கப் பெற்றது. ஆகவே 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு 2,000 ரூபா சம்பளத்தை வழங்க வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கிறேன்.

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜா தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆகவே அவர் இந்த 2,000 ரூபா சம்பள அதிகரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன். அதேபோல் பெருந்தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் இந்த 2,000 ரூபா சம்பள அதிகரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேயிலை ஏற்றுமதிக்கு அறவிடப்படும் செஸ் வரியில் ஒரு பகுதியை பெருந்தோட்ட கம்பனிகளுக்கு வரிச் சலுகையாக வழங்கி இந்த சம்பள உயர்வை வழங்கும்படி அரசை கோருகிறேன். இலங்கையில் மிகவும் பின்தங்கிய மக்களான பெருந்தோட்ட மக்களை கைதூக்கி விடாமல் நாட்டில் உண்மை சமத்துவம் ஏற்பட முடியாது'' என்றார்.

## பொய்யர்களின்...

பொய்யர்களின் அரசாங்கம் என்கிறோம்'' என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே இவ்வாறு தெரிவித்த தயாசிறி ஜயசேகர எம்.பி. மேலும் கூறுகையில்,

''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மின்கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைப்பதாக வாக்குறுதியளித்தார். மின்கட்டணம் குறைப்பு ஊடாக நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள்.

5,000 ரூபா கட்டணத்தை 3,000 ரூபாவாகவும் 9,000 ரூபாவை 6,000 ரூபாவாகவும் குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் தற்போது கட்டணம் குறைக்கப்படவில்லை. 6.1 சதவீதத்தால் மின்கட்டணத்தை குறைப்பதாக மின்சார சபை முன்வைத்த முன்மொழிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்கழு இரத்துச் செய்து மின்கட்டண திருத்த முன்மொழிவை மீளாய்வு செய்யுமாறு மின்சார சபைக்கு அறிவுறுத்தியிருந்தது.

தேசிய மின்னுற்பத்தி கட்டமைப்பில் 56 சதவீதம் நீர்மின்னுற்பத்தியின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஏன் 06 மாத காலத்துக்கு மின்கட்டண திருத்தத்தை பிற்போட வேண்டும் என்பதற்கான காரணத்தை குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த நவம்பர் மாதம் 09ஆம் திகதி தம்புள்ளை பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் மின்கட்டணத்தை குறைப்பதாக குறிப்பிட்டார். தற்போது மின்கட்டணத்தை ஓரிரு நாட்களில் குறைப்பதாக குறிப்பிடவில்லை என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். ஏன் பொய்யுரைக்கின்றீர்கள். காலை முதல் இரவு வரை பொய்யை மாத்திரமே குறிப்பிடுகின்றீர்கள். இதனால் தான் இந்த அரசாங்கத்தை பொய்யர்களின் அரசாங்கம் என்று குறிப்பிடுகிறோம். மின்கட்டணத்தை குறைப்பதாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவே வலியுறுத்துகிறோம்.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் மின்சார சபை முன்வைத்த பரிந்துரைகளை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முழுமையாக புறக்கணித்துள்ளது. தரவுகள் அனைத்தும் பொய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மின்சார சபை 167 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. சகலருக்கும் கடன் இல்லை. ஆகவே மின்சார சபைக்கு கடன் என்று பொய்யுரைக்காதீர்கள்'' என்றார்.

## ஞானசார...

அழிக்கப்பட வேண்டும்" என்ற கருத்தின் மூலம் இனங்களுக்கிடையிலான நல்லுறவை சீர்குலைத்து, அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் குற்றமொன்றை அவர் புரிந்துள்ளதாக கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன நேற்று தீர்ப்பளித்துள்ளார்.

அதன் பிரகாரம் ஞானசார தேரருக்கு இலகு பணிகள் கொண்ட ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக 1,500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## அரச பணியாளர்...

வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டபோது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கலந்துரையாடுமாறு தெரிவித்தார்.

எனினும், அந்த வரியை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என்ற மட்டத்துக்கு கொண்டுவர எமது அரசாங்கம் முடிவெடுத்தது. அதேபோன்று இந்த சம்பள அதிகரிப்பு தொடர்பிலும் சர்வதேச நாணயத்துடன் எந்த சிக்கலும் ஏற்படாது என்பதை உறுதியாக கூற முடியும் என்றார்.

இதன்போது குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க எம்.பி. அவ்வாறானால் அரசாங்க ஊழியர்களுக்கு 25,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமா? எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர், பொதிக்குள் என்ன இருக்கின்றது என்பதை பார்ப்பதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம். 25,000 ரூபா இல்லாவிட்டாலும் தற்போதைய வாழ்க்கை செலவுக்கேற்ப அந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

25,000 ரூபா சம்பள அதிகரிப்பு என்பது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த விடயம். அதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டு வருடங்களுக்கு மேல் அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர் அதனை செய்யவில்லை'' என்றார்.

## உள்ளூராட்சி...

பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குசானி ரோஹணதீர இந்த சட்டவரைவின் நோக்கத்தை வருமாறு சபைக்கு வாசித்தார்.

குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ள விடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்காகவும் தேர்தல்களை நடத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மின் கட்டணத்தை...

மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் உள்ளோம் என வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மின்கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைப்பதாக வாக்குறுதியளித்தார். இப்போது ஏன் 06 மாத காலத்துக்கு மின்கட்டண திருத்தத்தை பிற்போட வேண்டும் எனக்கேள்வி எழுப்பினார். இதற்கு வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி எழுந்து பதிலளித்தபோதே, ''நாம் ஒருபோதும் மின்கட்டணத்தை ஓரிரு நாட்களில் குறைப்பதாக குறிப்பிடவில்லை. 03 வருட காலப்பகுதிக்குள் மின்கட்டணத்தை நிலையான தன்மையில் பேணுவதற்கும் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளினால் மின்கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவையே மக்கள் இன்று எதிர்கொள்கிறார்கள். ஆகவே மின்கட்டமைப்பு துறையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஆகவே மின்கட்டமைப்பு புனரமைக்கப்படும். 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் மின்கட்டணம் குறைக்கப்படாத காரணத்தால் இன்று நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன'' என்றார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**ரிஷபம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும்.

**மிதுனம்** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**கடகம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.

**சிம்மம்** தொழில் ரீதியில் உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கன்னி** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

**துலாம்** தேவையற்ற பயணங்களால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும். உங்கள் சொத்துக்களின் மீது கவனம் செலுத்துங்கள்.

**விருச்சிகம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**தனுசு** முக மலர்ச்சியுடன் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தில் வெற்றி, விண்ணப்பித்திருந்த கடன் இன்று கிடைக்கும்.

**மகரம்** அதிர்ஷ்டத்தினை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியினை பெற்றுக்கொள்ளுங்கள்.

**மீனம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர், உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**திதி:** ஏகாதசி மு.ப.10.19 வரை பின் துவாதசி
**நட்சத்திரம்:** கார்த்திகை பி.ப.1.45 வரை பின் ரோஹிணி
**பிறை:** வளர்பிறை
**யோகம்:** சித்த யோகம் பி.ப.1.45 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை 6.25 – 9.25 மணிவரை காலை10.25 – 10.25 மணிவரை பகல்1.25 – 3.25 மணிவரை மாலை5.25 – 6.25 மணி வரை
**ராகு காலம்:** 10.55 – 12.25 மணிவரை
**எமகண்டம் :** 3.25 – 4.25 மணிவரை
**குளிகை :** 7.55 – 9.25 மணிவரை
**சந்திராஷ்டமம்:** துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று பிற்பகல் 1.45 மணிவரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அத்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி
**இன்று பிற்பகல் 1.45 மணிக்குமேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரீடம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி
**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**
**விசேட தினம்:** ஏகாதசி விரதம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# தொல்பொருள் துறையின் காணி அபகரிப்பே அரிசித் தட்டுப்பாடு - விலை உயர்வுக்கு காரணம்

## குகதாசன் எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டின் அரிசித் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வுக்கு தொல்பொருள் துறையும் காரணம் என்றும் அந்தத் துறையினால் திருகோணமலை மாவட்டத்தில் பெருமளவான விவசாய நிலங்கள் விவசாயம் செய்ய முடியாதவாறு கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட எம்.பியான சண்முகநாதன் குகதாசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

''கடந்த நாட்களில் சபையில் அரிசி விலை உயர்வு தொடர்பில் கதைக்கப்பட்டது. இதற்கு வெள்ளம், வறட்சி, பதுக்கல் மட்டும் காரணமல்ல. அரசாங்கத்திலுள்ள பல்வேறு திணைக்களங்களும் காரணமாகும். இதில் தொல்பொருள் துறையே முதன்மை வகிக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் நூற்றாண்டுகாலமாக மக்கள் விவசாயம் செய்த இடங்களை தொல்பொருள் இடங்களாக அறிவித்து அவற்றை கையகப்படுத்தி விவசாயத்தை செய்யாது தடைசெய்கின்றது.

இந்த ஆண்டில் கடந்த 09 நாட்களில் திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் வட்டவான் கிராமத்தில் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிருடன் கூடிய நிலத்தை தொல்பொருள் பகுதியாக அறிவித்துள்ளது. அதேபோன்று குச்சவெளி கிராமசேவையாளர் பிரிவில் 1985ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் பயன்படுத்தி வந்த நெற்களஞ்சியம் மற்றும் சந்தை பகுதிகளை தொல்பொருள் பகுதியென அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் தொல்பொருள் துறையானது குச்சவெளி செயலாளர் பிரிவில் திரியாய் கிராமசேவகர் பிரிவில் உள்ளடங்கும் பிரித்தானி காலத்தில் வழங்கப்பட்ட உறுதிகளை கொண்ட 150 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள்



விவசாயம் செய்யும் ஆயிரம் ஏக்கர் காணிகளை தொல்பொருள் பகுதியென அறிவித்து விவசாயம் செய்ய முடியாமல் தடுத்து வைத்துள்ளது.

இதுமட்டுமன்றி குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் தென்னன்மரவெளி, புல்மோட்டை, திரியாய், கும்புறுபிட்டி, நிலாவெளி, பெரியகுளம் போன்ற கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்த 1994 ஏக்கர் நிலத்தை எல்லை கற்களை வைத்து கைப்பற்றி வைத்துள்ளது. இந்த செயலானது திருகோணமலை மாவட்டத்தில் நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் இதனாலும் நாட்டுக்கு இழப்பு ஏற்படுகின்றது என்பதையும் இந்த சபையின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

இதுமட்டுமன்றி தொல்பொருள் துறையானது மூதூர் ராஜபந்தான் மலைக் கோயில், மத்தளமலை முருகன் கோயில், கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோயில், சேருவில திருமங்கலாய் சிவன் கோயில், ஈச்சலம்பற்று பெரியசாமி கோயில், குச்சவெளி கந்தசுவாமி முருகன் கோயில், செம்மிமலை மலைக் கோயில், திரியாய் நாகதம்பிரான் கோயில் ஆகிய இடங்களையும் அவற்றை சூழவுள்ள விவசாய நிலங்களையும் கையகப்படுத்த தொல்பொருள் துறை முயற்சிகளில் ஈடுபடுகின்றது.

அத்துடன் வனத்துறை, துறைமுக அதிகாரசபை ஆகியனவும் மக்களின் விவசாய காணிகளை கையகப்படுத்தி விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கின்றது. இது நாட்டுக்கு பேரிழப்பை ஏற்படுத்துகின்றது'' என்றார்.

# மியன்மார் ரோஹிங்யா அகதிகள் விடயத்தில் சர்வதேச சட்டங்களை மதித்து நடவுங்கள்

## ரிஷாத் எம்.பி. சபையில் கோரிக்கை



சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து, மியன்மார் ரோஹிங்யா அகதிகள் விவகாரத்தில் மனிதாபிமான ரீதியில் செயற்படுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று (09) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

''அண்மையில் மியன்மார் ரோஹிங்யா அகதிகள் முல்லைத்தீவில் கரையொதுங்கி திருமலையில் வைக்கப்பட்டிருந்தபோது நான் அவர்களை பார்வையிட சென்றிருந்தேன். அவர்களுடன் கலந்துரையாடுவதை பொலிஸார் தடுத்து, எமக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தினர். நான் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்தபோது, 03 இலட்சம் அகதிகளுக்கு அரசாங்கத்தின் உதவியுடன் பல மாதங்கள் மூன்றுவேளை உணவு வழங்கி பராமரிக்க நடவடிக்கை மேற்கொண்டேன். எனவே, ஒரு மூத்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், எனக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டமை மன வருத்தத்தை தோற்றுவித்தது. உறங்குவதற்கு பாய், தலையணை கூட அந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச செயலாளரின் அனுமதியுடனேயே நான் அங்கு சென்று அவர்களுக்கு தேவையான சில உதவிகளை செய்தேன்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எங்களுடன் இரண்டு தசாப்தகாலமாக இந்த பாராளுமன்றில் இருந்தவர் என்ற வகையில், அவரது நற்பண்புகளை கண்டிருக்கின்றோம். அவரது பேச்சு மற்றும் வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொண்டுதான், மூவின மக்களும் இந்த அரசாங்கத்தை ஆதரித்தனர். இந்த அகதிகளை மியன்மாருக்கு திருப்பி அனுப்பவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு எமது நாட்டுக்கு அகதிகள் வருகின்றபோது, சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அந்தவகையில், இந்த மியன்மார் அகதிகள் விடயத்திலும் மனிதாபிமான ரீதியில் செயற்படுங்கள்.

மியன்மார் அரசாங்கத்தினாலோ அல்லது வேறு சில குழுக்களினாலோ அங்குள்ள முஸ்லிம் மக்களை கொடுமைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தேர்ச்சியாக நடைபெறுகின்றன. இதனால், 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் உயிர்களை பாதுகாக்க பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சென்று தஞ்சமடைந்துள்ளனர். அதுபோலவே, எங்கோ சென்ற இந்த அகதிகள், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் கரையொதுங்கியுள்ளனர். எனவே, அவர்களை சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் மியன்மாருக்கு திருப்பி அனுப்புவது நியாயமில்லை. அவ்வாறு அனுப்பும்பட்சத்தில், இதைவிட பெரிய கொடுமை ஏதும் இருக்காது.

எனவே UNHCR மற்றும் ஐ.நா. நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, அகதிகளை தாம் விரும்பும் நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நமது நாட்டிலிருந்தும் இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள், வேறு நாடுகளில் மகிழ்ச்சியுடன் நல்ல நிலையில் வாழ்கின்றனர். எனவே, சர்வதேச நடைமுறையை மதித்து செயற்படுங்கள். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இவ்வாறு வந்த அகதிகளை முறைப்படி தாம் விரும்பிய நாடுகளுக்கு அனுப்பி வைத்ததை இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அதேபோன்று, மியன்மார் அகதிகளுக்கு உதவி செய்ய விரும்புபவர்களை தடுக்க வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்றார்.

# அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப்படகுகளால் யாழ். சுழிபுரம் மீனவர்களின் வலைகள் நாசம்!





(பு.கஜிந்தன்)

இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பினுள் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையால் யாழ்ப்பாணம் - சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவரின் 07 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன.

குறித்த மீனவர் திருவடிநிலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் (08) மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் அவரது வலைகளை அறுத்துள்ளன. இதனால் அவரின் 26 வலைகள் அறுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நேற்றிரவு (நேற்று முன்தினம் 08) 10 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ரோலர்கள் எமது வலையை மட்டுமல்லாமல் வேறு சங்கங்களின் வலைகளையும் அறுத்துள்ளன. இப்பொழுது மீன்பிடி பருவகாலம். இந்திய இழுவை படகுகளின் இவ்வாறான செயற்பாடுகளால் நாங்கள் உழைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

07 இலட்சம் ரூபா வங்கியில் கடன் பெற்றே இந்த வலைகளை உருவாக்கி கடலில் தொழில் செய்தேன். எனது வலைகளை இந்திய இழுவைப் படகு அறுத்துச் சென்றதால் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வேன். வங்கிக் கடனை செலுத்த என்ன செய்வேன் என்று தெரியாமல் தவிக்கின்றேன்.

புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி பல நல்ல வேலைத்திட்டங்களை செய்கின்றார். அதுபோல இந்திய மீனவர் பிரச்சினையையும் தீர்த்து வையுங்கள். புதிதாக வந்த அமைச்சர் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த வேண்டும். அரசாங்கம் எனக்கு இழப்பீட்டை வழங்கி, நான் மீண்டும் தொழில் செய்ய வழிவகுக்க வேண்டும் என்றார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை

# பயங்கரவாத தடைச் சட்டம் நீடிக்கலாமா?

எதிர்க்கட்சியில் இருந்தபோது தாம் எதிர்த்த பயங்கரவாதத் தடைச் சட்டம் ஏன் இன்னும் அமுலில் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்போது நாட்டில் இருந்த பிரிவினைவாத, பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவே பயங்கரவாத தடைச்சட்டம் 1979 இல் தற்காலிக சட்டமாக இயற்றப்பட்டது. 3 தசாப்த கால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து, 15 வருடங்களுக்கு மேலாகியும் இந்த சட்டத்தை அமுலாக்கும் விடயத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இந்த சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்க்கருத்துக் கொண்டோர், அரசுக்கு எதிரான போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இலங்கை கையொப்பமிட்ட மற்றும் அதற்குக் கட்டுப்பட்ட சர்வதேச சட்டங்கள் தொடர்பிலும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்திலும் வெளியிலும் கருத்துத் தெரிவித்திருந்தமையால், இந்த சட்டத்தை இரத்துச் செய்வதா அல்லது அதற்கான திருத்தத்தைக் கொண்டு வருவதா என்பது குறித்தான தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் நேற்றுமுன்தினம் (08) பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) / தேசிய மக்கள் சக்தி (தே.ம.ச.) நிர்வாகமானது ஆட்சிக்கு வந்து ஓரிரு மாதங்கள் கடந்துள்ள நிலையில், மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதாக அது கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டுள்ளது.

ஜே.வி.பி./தே.ம.ச.யின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம், பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட அனைத்து அடக்குமுறைச் செயல்களையும் ஒழித்து, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் சிவில் உரிமைகளை உறுதி செய்வதாக வெளிப்படையாக வளமான நாடு, அழகான வாழ்க்கை என்று உறுதியளித்தது.

சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி.யின் அரசியல் குழு உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான விஜித ஹேரத், இந்த நேரத்தில் "பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவோ அல்லது திருத்தவோ முடியாது" என அறிவித்தார். இந்த கொடூரமான சட்டம் புதிய ஆட்சியால் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என்றும் அவர் கூறிக்கொண்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றுவதற்கான அதன் உறுதிப்பாட்டைக் கைவிடுவதுடன், ஜே.வி.பி./தே.ம.ச. நிர்வாகம், தான் தூக்கி வீசுவதாக வாக்குறுதியளித்த ஜனாதிபதி பதவியின் பரந்த மற்றும் ஜனநாயக விரோத நிறைவேற்று அதிகாரங்களையும் பேணுகிறது.

ஜனாதிபதித் தேர்தலின் போது அது காட்டிய ஜனநாயக தோரணைக்கு மாறாக, ஜே.வி.பி. மற்றும் ஏனைய சிங்கள பேரினவாத அமைப்புகளும் 2006ல் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்று கோரி கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின. 2002 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான கொழும்பின் போர் நிறுத்தத்தின் போது இந்த கொடூரமான சட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இப்போது அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பானது அரச இயந்திரத்துடனான புதிய ஆட்சியின் ஆழமான தொடர்புகளை மேலும் எடுத்துக்காட்டுவதுடன் சர்வதேச நாணய நிதியம் ஆணையிட்டுள்ள அதன் சிக்கனத் திட்டத்துக்கு எதிராக எழும் எந்தவொரு வெகுஜன எதிர்ப்பையும் நசுக்க முயற்சிப்பதோடு ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் பயன்படுத்தும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

செப்டெம்பர் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மூன்று பேர் கொண்ட அமைச்சரவையை உருவாக்கி, தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, விரைவில் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதாக அறிவித்தார். ஈவிரக்கமின்றி விரைவாக அதன் கடன் திட்டத்தை செயற்படுத்துவதற்காக, அவரும் ஜே.வி.பி./தே.ம.ச.யும் கணிசமான பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் வலுவான அரசாங்கத்தை அமைத்தன .

கடன் திட்டங்களில், மக்கள் மீது கணிசமான வரி அதிகரிப்பு, 400க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களை தனியார்மயமாக்கல், வணிகமயமாக்கல் அல்லது மூடுதல் மற்றும் 500,000 அரச தொழில்களை அழிப்பதும் அடங்கும். இலவச சுகாதார சேவை மற்றும் கல்வியை மேலும் பாதிக்கும் வகையில் தொடர்ந்து மானியங்களை வெட்டிக் குறைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

விக்கிரமசிங்க அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வை கடந்த மாதம் அரசாங்கம் தடுத்து நிறுத்தியமை அரச ஊழியர்களிடையே கோபத்தை தூண்டியது. இலட்சக் கணக்கான அரச ஊழியர்களால் கடந்த வருடம் ஜூலையில் நடத்தப்பட்ட வெகுஜன எதிர்ப்புக்கள் மற்றும் வேலைநிறுத்தங்களுக்கு பிரதிபலிக்கும் வகையில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் இந்த சம்பள உயர்வு உறுதியளிக்கப்பட்டது.

ஜே.வி.பி./தே.ம.ச. அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை தக்கவைத்துக்கொள்வதானது, தொழிற்சங்க அதிகாரத்துவங்களால் வளர்ந்து வரும் தொழிலாள வர்க்க எதிர்ப்பைக் கட்டுப்படுத்தவும் திசைதிருப்பவும் முடியாவிட்டால், அது தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக அரச அதிகாரத்தை கட்டவிழ்த்துவிடும் என்று சர்வதேச மூலதனத்துக்கும் இலங்கை பெருவணிகத்துக்கும் விடுக்கும் தெளிவான சமிக்ஞையாகும்.

முதலில் 1979 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் கீழ் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், தமிழ் போராளிக் குழுக்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு வழிமுறையாக ஆரம்பத்தில் நியாயப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொழும்பின் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது இலங்கைத் தீவு முழுவதும் உள்ள தமிழர்களுக்கு எதிராக இந்த சட்டம் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டது. தமிழர்கள் பட்ட துயரங்கள் சொல்லிமாளாதவை.

பின்னர் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள், அரசியல் எதிரிகளுக்கு எதிராக, குறிப்பாக தெற்கில் 1988 முதல் 1990 வரையான கிராமப்புற அமைதியின்மையின் போது, பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தின. இந்த காலகட்டத்தில், அரச படைகள் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று தள்ளின. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கங்கள், அரசியல் செயற்பாட்டாளர்களையும் ஏனைய எதிர்ப்பாளர்களையும் தடுத்து வைப்பதற்கு இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தை பரவலாகப் பயன்படுத்தின.

பயங்கரவாத தடைச் சட்டமானது இராணுவத்துக்கும் பொலிஸுக்கும் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றிய தெளிவற்ற சந்தேகங்களின் அடிப்படையில், ஆதாரங்கள் இல்லாமலேயே நபர்களை எதேச்சதிகாரமாக கைது செய்ய அனுமதியளிக்கிறது. கைதிகளை 90 நாட்கள் வரை விசாரணையின்றி காவலில் வைக்க முடியும், இது 18 மாதங்கள் வரை நீடிக்கப்படலாம். நிரபராதி என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஒரு முழுமையான மற்றும் நியாயமான நீதிமன்ற விசாரணைக்கான உரிமைக்கு குழிபறிக்கும் வகையில், நடுவர் மன்றம் இல்லாமல் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. பின்னர் நீதிமன்றத்தில் ஆதாரமாக பயன்படுத்தப்படுவதன் பேரில், ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக தாம் சித்திரவதை செய்யப்பட்டதாக ஏற்கனவே பல கைதிகள் புகார் அளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தடைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை. அதன் நோக்கத்தின்படி, அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்கும் அடிப்படை ஜனநாயக மற்றும் சட்ட உரிமைகளை அபகரிப்பதற்கும் அது திட்டமிட்டபடி அடுத்தடுத்த அரசாங்கங்களால் பயன்படுத்தப்பட்டது.2017ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் முன்னாள் அரசாங்கம் "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை" உருவாக்கியது. 2023 இல் விக்கிரமசிங்க நிர்வாகம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியது. இரண்டு அரசாங்கங்களும் தாம் பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்ற விரும்புவதாகக் கூறிக்கொண்டாலும் அவர்களின் பிரேரணைகள் அதன் கடுமையான விதிகள் பலவற்றைத் தக்கவைத்துக் கொண்டன. தற்போதைய ஆட்சியானது இந்த மாதிரியான தோரணையை அப்படியே கைவிட்டுள்ளது.

இந்த நிலைமை நீடிக்குமானால் சர்வதேச ரீதியாக விமர்சனங்களை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிவரலாம்.இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவோர் பட்டியலை அரசாங்கம் இப்போது தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது போன்ற விடயங்கள் நல்லாட்சிக்கான அறிகுறியை காட்டவில்லை.

# எமக்காக உயிர்நீத்த எம்மண்ணின் தியாகிகள்

இரு நூற்றாண்டைக் கடந்த ஒரு சமூகம். இந்த இனவாத நாட்டில் ஏனைய சமூகத்தினரைப் பொறுத்தவரையில் ஒரு தாழ்த்தப்பட்ட -கேளிக்கை நிறைந்த - வந்தேறிகளாக அடையாளம் கொடுக்கப்பட்டு இதுவரைகாலமும் வந்துள்ளது. அடிமை வாழ்வுக்கு என்னென்ன மறுபெயர்கள் வழங்க முடியுமோ அத்தனை புனைப்பெயர்களையும் பெற்று தனக்கென்று ஒரு மொழி, தனக்கென்று ஒரு கலை, கலாசாரம், சரித்திர ரீதியான பாரம்பரியங்களையும் தனக்கென்று இலக்கியங்களையும் கொண்டு முட்டிமோதி இங்கே இலங்கை மலையகம் தமிழர் தன்னை ஒரு தேசிய இனமாக நிலைநிறுத்த எத்தனையோ பெரும் முயற்சிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறது.

உழைப்புக் கருதி ஏமாற்றி இந்த நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு இந்த நாட்டுக்காகவும் மண்ணின் உயர்வுக்காகவும் உழைத்து மாண்டுபோன மக்களுக்கு சக மனிதன் என்றோ அல்லது இந்நாட்டின் மக்கள் என்றோ கௌரவத்தைக் கூட வழங்க இந்த இரு நூற்றாண்டுகள் வந்த நிலையிலும் மக்களும் அரசியல் தலைவர்களும் இன்றும் முன்வரவில்லை. இவர்களும் அதற்கான எந்த அடிப்படை மாற்றங்களை நோக்கிய எந்த முயற்சி களையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் ஒதுக்கப்பட்டிருந்தாலும் சுரண்டப்படும் எங்களின் வாழ்க்கையை வாழ, எம்நலத்துக்காக எங்களின் தனித்துவமான தனித்துவங்களோடு தேசிய இனமாக எம்மை மாற்றியமைத்துக்கொள்ளவும் எங்களின் சுதந்திரத்துக்காகவும் உரிமை களுக்காகவும் இன்றுவரை தொடர்ந்து ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம்.

இந்தக் காலவோட்டத்தின் மத்தியில் எங்களின் துயரம் நிறைந்த வாழ்க்கையின் பயணத்திலும் இலட்சக்கணக்கான உயிர்களை இந்த மண்ணுக்காகத் தாரைவார்த்துள்ளோம். ஒருபுறம் இங்கு ஏமாற்றி அழைத்துவரப்பட்டபோதும் - அதற்குப் பின்னரான கொடிய வாழ்வியலின்போதும் - வேலைத் தலங்களின்போதும் - தேயிலைக் காடுகளின்போதும் இது ஒருபுறமிருக்க மறுபுறம் தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக போர் முரசு கொட்டியபோதெல்லாம் முதலாளித்துவத்தின் கைக்குழந்தைகளாலும் பொலிஸ் படைகளின் துணைகொண்டும் இந்த மண்ணில் மாண்ட தொழிலாளிகளின் உயிர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவைகள்.

அந்த வகையில், இலங்கை பெருந்தோட்டத் தொழிற்றுறையில் குறிப்பாக தேயிலைத் துறையில் எழுந்த போராட்டங்களையும் அப்போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த வீர தொழிலாளத் தியாகிகளையும் இங்கே நாம் நினைவுகூராமல் இருப்பது அபத்தம் நிறைந்த ஒன்று.

மனித சிந்தனையை தலையிட்டு சுட்டிய விலங்குகளை எல்லாம் தலைத்தெறிய வேண்டும் என்ற காரணத்துக்காக எவன் ஒருவன் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து வாழ்கிறானோ அவனே மனித ஜாதியில் உயர்ந்தவன்.இலக்கியங்களில் எங்கோ வாழ்ந்து மறைந்த தியாகிகளைக் கொண்டாடும் சமூகம் எப்போதும் தம்மைச் சுற்றி நமக்காக உயிர்நீத்த தியாகிகளை நினைவுகூருவதும் இல்லை, அதனை எதிர்கால சமுதாயத்துக்காக கொண்டுசென்றதும் இல்லை என்பதை மலையகத் தியாகிகள் வரலாற்றில் நேரடியாக காணமுடிகிறது.

அவ்வாறு மறைக்கப்பட்ட வரலாறுகளில் ஒன்றுதான் உரிமைப் போராட்டத்துக்காக உயிர்நீத்த மலையகத் தியாகிகள். தேயிலைச் செடியின் வேர்களுக்குள் உரமாகிப்போன அவர்களின் வஞ்சிக்கப்பட்ட வரலாறுகள் இன்று வரை தொடரும் நிலையிலும் வரலாற்றுப் பக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக உயிர் நீத்து தமது பெயர்களைப் பதித்துச்சென்ற அந்த வீரர்களை நினைவுகூருவது இல்லை என்பது பெரும் மனக்கசப்பே.




இலங்கை பெருந்தோட்டத்துறை வரலாற்றில் 1940ஆம் ஆண்டு முதலாம் திகதி மத்திய மாகாண ஹேவாஹெட்ட பகுதியிலுள்ள முல்லோயா தோட்டத் தொழிலாளர் களின் சம்பள உயர்வு கோரிய போராட்டமே உழைக்கும் வர்க்கத்தின் முதலாவது போராட்டமாக அமைந்த அதேவேளை கோவிந்தனோடு ஆரம்பிக்கப்பட்ட நீண்ட வரலா றானது 2020 ஒக்டோபர் மாதம் காராளன் மணிவண்ணனது நீண்டதொரு வரலாறானது ஒருபுறம் திட்டமிட்டு மறைக்கப்பட்டும் மறுபுறம் அறிந்தவர்களும் தெரிந்த வர்களும் அதனை உரிய முறையில் எதிர்காலத்துக்காக கொண்டு செல்லவில்லை என்பதோடு உரிய முறையில் ஆவணப்படுத் தப்படவில்லை என்பதும் கூட எம்மக்களுக்கு இழைத்த துரோகங்களில் இதுவும் ஒன்றே.

இம் மக்களின் வரலாறுகளோ மலர் பாதையில் நிரம்பியவை அல்ல.அவை சிவப்பு கறுப்பு நிறங்களின் சேர்வை கல்லும் முள்ளும் நிறைந்த பாதை. அது தினமும் பல உயிர்களை இங்கே இழந்து இந்த மண்ணுக்காக உடலையும் உயிரையும் கொடுத்து வளர்ந்ததொன்றாகும்.

அந்த வகையில் மலையக மக்களின் சிறிய வெற்றிகளும் பெரிய போராட்டங்களும் வரலாற்று பெருந்துரோகங்களும் நினைவுகூரப்பட வேண்டியவை மலையகத்தவர் என தன்னை மார்தட்டிக் கொள்பவர்களின் கடப்பாடு என்பதோடு, பொதுவாக மலையகத்தில் உயிர்நீத்த தியாகிகள் அனைவரும் தொழிற்சங்கப் போராட் டங்களில் உயிர்நீத்தவர்களாக பட்டியலி டப்பட்டாலும் பல குறிப்பிட்ட சமூகத் தையுமே சுட்டிக்காட்டியுள்ளது என்ப தையும் வரலாற்றில் தெளிவாக அறிய லாம். ஆனால், இன்னொரு கசப்பான விடயம், மலையகத்தில் இயங்கும் தொழிற்சங்கங்களும் இதுவரை இவர்களைப் பற்றி பேசியதும் இல்லை, நினைவுகூரியதும் இல்லை.

ஓர் இன அரசியலையும் ஒரு இருநூறு வருட வாழ்வியலையும் பேசி முடித்த நாம், இனிவரும் காலங்களில் இவர்களை மறந்துவிட்டு எந்த நிகழ்வையும் ஏற்பாடு செய்வது பொருத்தமற்ற ஒன்று. அதேபோல் இளைய சமுதாயமாவது முன்னோர்கள் விட்ட பெரும் தவறுகளை விடாமல் இருப்போம் என்பதை இங்கே கூறுவ தோடு உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூருவோம்.

நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இங்கு இந்த சமுதாயம் மலையக தமிழர்களை தவிர்ந்து இரண்டு விதமான நினைவு கூரல்களை தொடர்ச்சியாக காலாகாலமாக ஒரு சந்ததி இன்னொரு சந்ததிக்கு கையிலுக்கும் செயற்பாட்டை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்து வருகிறது. ஒன்று வடபுலம் சார்ந்ததாகவும் இன்னொன்று தென்புலம் சார்ந்ததாகவும் அமையப் படுகின்றது. இறந்தவருக்கான மரியாதைகள் நினைவு கூரும் நிகழ் வுகள் அங்கீகரிக்கப் படாவிட்டாலும் அங்கீகரிக் கப்பட்டாலும் கூட தொடர்ச்சியாக அந்த நிகழ்வுகள் சட்ட விதிமுறை களுக்கு அப்பாலும் நடத்தப்பட்டு தான் இருக்கிறது. இதே சோக வரலாறைக் கொண்டதும் இதிலிருந்து சற்று மாறுபட்டும் உயிர் துறந்தோர் இங்கும் காணப்படுகின்ற வேளையிலும் அவர்களுக்கான சரியான முறையிலான மரியாதைகளோ நினைவு கூரும் நினைவுகளோ இதுவரை நடைபெற்றதாக வரலாறுகள் இல்லை. இதில் ஒன்றை மட்டும் குறிப்பிட வேண்டும். கடந்த வருடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் அவர்களினால் நுவரெலியாவின் மத்திய நகரில் மலையக தியாகிகளை முன்னிறுத்தி ஒரு நினைவு சாசனம் அமைக்கப்பட்டிருக்கிறது.இதை தவிர்த்து அவர்களுக்கான நினைவு கூரல்களோ நினைவுத் தூபிகளோ எங்கும் இல்லை.

மேலும் மலையகத் தியாகிகள் தினம் நிகழ்வை இதுவரை தொடர்ந்தேர்ச்சியாக தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் பிடிதளராதே போன்ற ஒரு சில அமைப்புகள் மட்டுமே ஜனவரி பத்தாம் திகதியன்று அவர்களுக்கான நினைவஞ்சலிகளை சவால்களுக்கு மத்தியில் செய்து வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**அந்த வகையில் மலையக மண்ணுக்காக உயிர்நீத்த தியாகிகளின் விபரங்கள் முறையே,**

15.01.1940 கோவிந்தன்(22), முல்லோயா தோட்டம் ஹேவாஹெட்ட (பொலிஸாரால் சுடப்பட்டார்).

27.02.1942 ராமசாமி வீரசாமி(22), ஸ்டெலன்போர்க் கந்தலா தோட்டம் புசல்லாவை(போப் துரை கொலை வழக்கில் தூக்கிலிடப்பட்டார்).

28.02.1942 ஐயன் பெருமாள் வேலாயுதம் (24), ஸ்டெலன்போர்க் கந்தலா தோட்டம், புசல்லாவை (போப் துரை கொலை வழக்கில் தூக்கிலிடப்பட்டார்).

17.01.1953 வெள்ளையன் (30),ராசம்மாள்(29), சாமிமலை, மீரியாக் கோட்டை (பொலிஸாரால் சுடப்பட்டனர்).

18.05.1956 ஏப்ரகாம் சிங்கோ, டயகம தோட்டம், அக்கரப்பத்தனை (பொலிஸாரால் சுடப்பட்டார்).

1956 கருமலை, நல்லதண்ணி தோட்டம், மஸ்கெலியா. (தொழிற்சங்கப் போராட்டத்தால் அடித்துக் கொல்லப்பட்டார்.

15.07.1957 கொம்பாடி, பொன்னையா ஏனிக் தோட்டம் உடபுசல்லாவை (பொலிஸாரால் சுடப்பட்டார்கள்)

02.04.1958 பிரான்சிஸ் அய்யாவு, கொட்டியாகலை தோட்டம், பொகவந்தலாவை. (பொலிஸாரால் சுடப்பட்டார்கள்).

02.03.1959 வைத்திலிங்கம், டெவன் தோட்டம், பத்தனை. (தொழிற்சங்க போட்டியால் கொலை செய்யப்பட்டார்).

08.11.1959 முத்துசாமி, ஏல்கடுவ தோட்டம், மாத்தளை. (சுடப்பட்டார்).

10.11.1961 ஆராயி, நடேசன்,செல்லையா,மாரியப்பன் லட்சுமி, தோட்டம் நாவலப்பிட்டி சுடப்பட்டு இறந்தனர்.

28.05.1964 அழகன் ரெங்கசாமி கந்தேநுவர தோட்டம், மாத்தளை. (சுடப்பட்டு இறந்தனர்).

08.11.1967 சோனை என்பவர் கிளாப்போக்கு தோட்டம் மடுல்கலை (தோட்டத்துக் கண்டக்டரால் )சுடப்பட்டார்

27.10.1970 அந்தோனிசாமி, மயிலிட்டியா தோட்டம். இரத்தினபுரி (சுடப்பட்டு இறந்தார்).

31.12.1970 பார்வதி,கந்தையா, ஆறுமுகம், ராமசாமி, கருங்காலி தோட்டம் மாத்தளை (பிரட்டுக் களத்தில் சுடப்பட்டு இறந்தனர்).

01.09.1970 அழகர்சாமி,ராமையர் கீனாக்கொல்லை தோட்டம், பசறை (சுடப்பட்டு இறந்தனர் பொலிஸாரே இருவரையும் புதைத்தனர்.)

11.05.1977 சிவனு லெட்சுமணன்(22), வட்டகொடை தோட்டம், வட்டகொடை டெவன் தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் போது சுடப்பட்டு இறந்தார்.

1980 -பழனிவேலு, பல்லேகல தோட்டம் கண்டி(கடப்பட்டு இறந்தார்).

27.02.1986 -ஜேசையா ஜோசப்(28), சென் சும்ஸ் தோட்டம், தலவாக்கலை (தொழிற்சாலையில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார்).

2000 ஒக்டோபர் -காராளன் மணிவண்ணன், ட்ரூப் டிவிசன் கிளனமெரா- தலவாக்கலை.(சுட்டுக் கொல்லப்பட்டார்).

இது இவ்வாறு இருக்க இவர்களின் சுதந்திர தாகமும் அல்லது வீர உணர்வு மேலோங்கி இருந்த சந்தர்ப்பங்களையும் காண முடிகிறது எடுத்துக்காட்டாக,

26.02.1942 தியாகி வேலாயுதம் தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டிருக்கும் வசனங்கள் வார்த்தை எடுத்துக்காட்டும்.

நமது உயிருக்கு உயிராக நேசித்த தாய் , தந்தையர், பிள்ளைகள், மனைவி மற்றும் குடும்பத்தினரை இழந்து முதலாளித்துவ ஆதிக்கமும் முப்படைகளும் துரோகங்களும் இவர்களை கொன்று அழித்த போதெல்லாம் இவர்கள் சோர்ந்து போகாமல் தனது நிலத்துக்காகவும்,தங்கள் இன உரிமைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தொடர்ச்சியாக வெவ்வேறு இடங்களில் போராடினாலும் கூட அவர்கள் போராட்டம் நோக்கங்கள் வேறுபட வில்லை. இழப்புக்கள் மேலும் மேலும் உறுதியை அழித்தவையாகவே காண முடிகிறதே தவிர ஓய்ந்த வரலாறுகள் இல்லை என்பதை ஆண்களின் படி இழப்புகளை பார்க்கலாம்.

இந்த தியாகிகளை நாம் கௌரவிக்க வேண்டும்,வணங்க வேண்டும், மரியாதை செலுத்த வேண்டும். இந்த தியாகிகளின் வீரத்தையும் சுதந்திர உணர்வையும் நிலம் மீது கொண்ட பற்றையும் அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டும். மலையகச் சமூகம் அவர்களை சுற்றி சூழ்ந்து காணப்படுகின்ற சங்கிலிகளை மிக விரைவில் அகற்றி விடுவார்கள்.

இன்றளவும் பல சங்கிலிகளை அகற்றி மெல்ல மெல்ல உயரம் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு சில அடிமை சங்கிலிகளை உடைத்து எறிந்து விட்டு இவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள். அந்த முன்னேற்ற பாதையில் 200 வருடங்களை கடந்து செல்கின்ற இந்த மக்கள் அன்று முதல் இன்று வரை இந்த நிலத்துக்காக இந்த நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டு செல்வதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை தான் இந்த நாட்டுக்கு குடியேறிய முதல் இன்று வரை தாரை வார்த்துக் கொடுத்திருக்கின்றார்கள். சிலர் போராட்ட தியாகத்தின் வழியாகவும் கொடுத்திருக்கின்றார்கள். அவ்வாறாக இந்த மண்ணுக்காக உயிர் நீத்த அத்தனை மனித உயிர்களுக்காகவும் அவர்களின் இரத்தத்தினால் இங்கு செழித்து வளர்ந்திருக்கின்ற தேயிலை காடுகளில் விதைகளையும் விருச்சங்களையும் தியாகிகளின் நினைவேந்தர்களோடு வணங்கி கௌரவித்து முன் செல்ல வேண்டும்.

**மா.ஜீவன்ராஜ்**

## நக்கல் நமசிவாயம்

***தை பிறந்தால் வழி பிறக்குமாம்... ஆனால் தை பிறக்குமுன்னர் வலி என்றால் தாராளமா இருக்குது பாருங்கோ...***



## இன்றைய நாளில்...

- **1881 – யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.**
- **1946 – லண்டனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் 51 நாடுகள் பங்குபற்றின.**
- **1946 – ஐக்கிய அமெரிக்கத் தரைப்படையின் சிக்னல் கோர்ப்ஸ் நிறுவனம் முதற்றடவையாக வானொலி அலைகளை நிலாவில் தெறித்துப் பெறும் முயற்சியில் வெற்றிபெற்றது.**
- **1966 – இந்திய - பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டுவர தாஷ்கந்த் உடன்பாட்டில் லால் பகதூர் சாஸ்திரி, ஐயூப் கான் ஆகியோர் கையெழுத்திட்டனர்.**
- **1972 – ஷேக் முஜிபுர் ரகுமான் பாகிஸ்தானில் 9 மாதங்கள் சிறையில் கழித்த பின்னர் புதிதாக உருவான பங்களாதேஷுக்குத் திரும்பினார்.**
- **1974 – யாழ்ப்பாணத்தில் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் 11 பொதுமக்கள் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்.**

# சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு நடவடிக்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்

## வட மாகாண ஆளுநரிடம் ஐங்கரநேசன் வலியுறுத்து




புட்கஜிந்தன்

''கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்ட விரோத செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்'' என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநரிடம் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி பொ.ஐங்கரநேசன் நேற்று (09) மனுவொன்றைச் சமர்ப்பித்த பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுண்ணாம்புக்கல் வடமேற்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். புவிச்சரித வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம்பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும் இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப்பொருளாக விளங்குகின்றன. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும் நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

சமீப நாட்களாக சுண்ணாம்புக்கல் அகழ்வும் அதனை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. சுண்ணாம்புக்கல் அகழ்வு பயிர்ச்செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையில் இருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது.

குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரச காணிகளிலும் தனியார் காணிகளிலும் பாரியளவில் சுண்ணாம்புக்கல் அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகின்றன. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயக்கப்படாதிருப்பதற்குச் சுண்ணாம்புக் கல்லைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளே காரணம்.

கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பிரமாண்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் இனிமேலும் அகழ்வைத் தொடர்வது சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் கிளிங்கர்களை எடுத்துவந்து, சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்க முடியும் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிருந்து வேறு மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக்கல்லை எடுத்துச்செல்வது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நொறுக்கப்பட்ட சுண்ணாம்புக்கற்களை அரைத் தயாரிப்பாகவோ அல்லது முடிக்கப்பட்ட தயாரிப்புகளாகவோ கருதமுடியாது என்பதால் இதனை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து உரிமம் அவசியம் என புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் யாழ். மாவட்டச் செயலருக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக்கல் வெளிமாவட்டங்களுக்குத் தங்கு தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆளுநர் உடனடியாக சுண்ணக்கல் அகழ்வில் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் பதவியேற்பு





மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் நேற்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். அதன்படி, சட்டத்தரணி கே.எம்.எஸ். திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர்.பி.ஹெட்டியாரச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார்.

## ஐஸ் போதைப்பொருளுடன் பதுளையில் இருவர் கைது

ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் பதுளை விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை, இங்கமருவ, வீரியபுர பகுதிகளைச் சேர்ந்த 19 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 10,720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இங்கமருவ மற்றும் வீரியபுர பகுதியில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை விசாரணையின் பின்னர் பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளராக கம்மம்பில நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கவினால் ஊவா மாகாண பிரதம செயலாளராக எம்.எல்.கம்மம்பில நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கினார்.

## திறந்த பாராளுமன்ற முன்னெடுப்புக்கான ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள் தெரிவு



பத்தாவது பாராளுமன்றத்தில் மீண்டும் ஸ்தாபிக் கப்பட்ட திறந்த பாராளுமன்ற முன்னெடுப்புக்கான பாராளுமன்ற ஒன்றியத்தின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் (08) பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர், பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது ஒன்றியத்தின் இணைத் தலைவராக அமைச்சர், பேராசிரியர் கிரிஷாந்த அபேசேனவின் பெயரை, பாராளுமன்ற உறுப்பினர் ஜனக சேனாரத்ன முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத் அதனை வழிமொழிந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்மொழிந்ததுடன், அதனை பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார வழிமொழிந்தார்.

அத்துடன், இந்த ஒன்றியத்தின் அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ண தெரிவுசெய்யப்பட்டதுடன், பிரதி இணைத் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே, சந்தன சூரிய ஆரச்சி, எஸ்.எம்.மரிக்கார் மற்றும் சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள், பாராளுமன்றத்தை பொதுமக்களுக்கு நெருக்கமடையச் செய்வதற்கு இந்த ஒன்றியத்தின் மூலம் மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தனர். அதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் கோரினர்.

## உலக பத்திரிகை புகைப்படக் கண்காட்சி இன்று ஆரம்பம்

இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் முதன் முதலில் இலங்கையில் நடைபெறவுள்ள உலக பத்திரிகை புகைப்படக் கண்காட்சி இன்று (10) கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்படக் கண்காட்சியை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நெதர்லாந்து தூதரகத்துடன் இணைந்து நடத்துகிறது.

கொழும்பில் ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் இன்று முதல் 20ஆம் திகதிவரை காலை 10.30 மணிமுதல் இரவு 7.00 மணிவரை இடம்பெறும் இந்த கண்காட்சியை கட்டணமின்றி இலவசமாக பார்வையிடலாம்.

இதேவேளை, கொழும்பில் சினமன் லைப் ஹோட்டலில் பெப்ரவரி 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை காலை 10.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை இலவசமாக பார்வையிடலாம்.

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையும் காலி மாநகர சபையில் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 02ஆம் திகதிவரையும் கண்காட்சியை இலவசமாக பார்வையிடலாம்.

2024ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்படப் போட்டியில் வெற்றி பெற்ற புகைப் படங்களை பார்வையிட உலகளாவிய ரீதியில் புகைப்படக் கண்காட்சி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ லங்கா மහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (09.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.0446 | 188.4581 |
| கனேடியன் டொலர் | 201.5952 | 210.3250 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.9659 | 41.5186 |
| யூரோ | 299.2742 | 311.6353 |
| ஜப்பான் யென் | 1.8375 | 1.9113 |
| சிங்கப்பூர் டொலர் | 211.6014 | 221.3402 |
| ஸ்ரேலிங் பவுன் | 359.0172 | 372.9059 |
| சுவிஸ் பிராங்க் | 317.3346 | 332.7180 |
| ஐ.அ. டொலர் | 291.7598 | 300.3145 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.3886 |
| குவைட் | குவைட் தினார் | 960.6499 |
| ஓமான் | ஓமான் றியால் | 769.1188 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.2155 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.8673 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.6130 |

## வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

### அல்குர்ஆன் சொல்லும் ஓர் அடிப்படையான செய்தி

*அல்குர்ஆன் மனித சமூகத்துக்கு சொல்லுகின்ற அடிப்படையான சில செய்திகள் இருக்கின்றன.*

*அவற்றில் ஒரு பிரதானமான செய்தி உலக வாழ்க்கையின் உண்மை நிலை தொடர்பானது. அல்குர்ஆன் அதிகம் பேசும் ஒரு பொருள் இது.*

*மறுமை வாழ்வுடன் ஒப்பிடும்போது உலக வாழ்வு எவ்வளவு அற்பமானது; நிலையற்றது என்பதுதான் அந்த செய்தி.*

*இந்த உண்மையை அல்குர்ஆன் பல விதங்களில் பல பாணிகளில் சொல்லுகிறது.*

*உதாரணமாக பின்வரும் அல்குர்ஆன் வசனங்களைக் கவனியுங்கள்:*

*“மறுமை(யின் வாழ்க்கை)க்கு முன்னால் இவ்வுலக வாழ்க்கையின் இன்பம் மிகவும் அற்பமானது.” (9:38)*

*”என்னுடைய சமூகத்தாரே! இவ்வுலக வாழ்க்கையெல்லாம் அற்பசுகம்தான்; அன்றியும், நிச்சயமாக மறுமையோ - அதுதான் (என்றென்றும் இருக்கும்) நிலையான வீடு.”(40:3)*

*இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம் நாம் வானத்திலிருந்து இறக்கிவைக்கும் மழைநீரைப் போன்றது; மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக்கூடியவைகளிலிருந்து பூமியின் தாவரங்கள் அதனுடன் கலந்து முடிவில் பூமி (அந்தப் பயிர்கள் மூலம்) தன் அலங்காரத்தைப் பெற்று கவர்ச்சியடைந்த பொழுது, அதன் சொந்தக்காரர்கள் (கதிரை அறுவடை செய்துகொள்ளக்கூடிய) சக்தியுடையவர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருந்தனர்; அச்சமயம், இரவிலோ அல்லது பகலிலோ அதற்கு நம் கட்டளை வந்து (அதை நாம் அழித்துவிட்டோம்). நிச்சயமாக நேற்று அது (அவ்விடத்தில்) இல்லாதது போன்று அறுக்கப்பட்டதாக, அதை நாம் ஆக்கிவிட்டோம்; இவ்வாறே நாம் சிந்தனை செய்யும் கூட்டத்துக்கு (நம்) அத்தாட்சிகளை விவரிக்கின்றோம்”.(10:24)*

*அல்குர்ஆனின் உலக வாழ்வு பற்றிய இப் போதனைகள் நமக்குச் சொல்லும் செய்தி யாதெனில் ஒருவர் உலக சம்பத்துக்களை எவ்வளவு பெற்றிருப்பினும் அவர் பெற்றிருப்பவை அற்பமானவையே; அவ்வாறே ஒருவர் உலக சம்பத்துக்களை இழந்து விடுகின்றபோது அவர் இழந்தவை எல்லாம் சொற்பமானவையே. ஏனெனில் முழு உலக வாழ்க்கையும் அற்பமானதும் நிலையற்றதுமாகும்.*

*உலக வாழ்வு தொடர்பான இவ்வுண்மையைப் புரிந்திருப்பவர் வாழ்வில் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருப்பார். அவர் பெற்றவைகளை வைத்து பேரானந்தம் கொள்ளவும் மாட்டார்; பெறாதவைகளை நினைத்தோ அல்லது பெற்றவைகளில் இழந்தவற்றை நினைத்தோ அதிகம் கவலை கொள்ளவும் மாட்டார்.*

*அல்குர்ஆன் இது பற்றி பின்வருமாறு சொல்கின்றது:*

*“உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றைப் பற்றி நீங்கள் துக்கப்படாமல் இருக்கவும். அவன் உங்களுக்கு அளித்தவற்றை வைத்து நீங்கள் (அதிகம்) மகிழாதிருக்கவும் (இதனை உங்களுக்கு அல்லாஹ் அறிவிக்கிறான்).” (57:23)*

*எனவே உலக வாழ்வில் கவலைகள், துன்பங்கள், இழப்புகளின் போது ஸப்ர்-பொறுமை கொள்வதற்கும் சந்தோஷங்கள், சுகங்கள், இலாபங்களின்போது ஷுக்ர்-நன்றி செலுத்துவதற்கும் எம்மை நாம் பயிற்றுவித்து கொள்ளல் வேண்டும்.*

*அப்போது இன்பம், துன்பம் இரண்டு நிலைகளிலும் நாம் நலமாக இருக்கலாம்; மன அமைதியோடு இருக்கலாம்;*

*சலனமோ சபலமோ, சஞ்சலமோ இல்லாமல் வாழலாம்.*

*ஒரு முஃமினுடைய இந்த அற்புதமான மனோநிலையை நபி (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு வர்ணிக்கின்றார்கள்:*

*“ஒரு முஃமினுடைய காரியம் ஆச்சரியமானது. அவனது காரியங்கள் அனைத்தும் அவனுக்கு நல்லதாகவே அமைகின்றது. இந்நிலை முஃமினைத் தவிர வேறுயாருக்கும் ஏற்படாது. அவனுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செயல் ஏற்பட்டால் அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக அமைகிறது. அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அவன் பொறுமையை கைக்கொள்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையாக அமைகிறது.”*

அறிவிப்பவர் : ஸுஹைப் இப்னு ஸினான் (ரலி)

நூல் : முஸ்லிம்

## மோட்டார் சைக்கிளுடன் பஸ் மோதி விபத்து – ஒருவர் பலி

அநுராதபுரம் நிருபர்

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - கண்டி ஏ9 பிரதான வீதி மதவாச்சி வஹமல்கொள்ளேவ பகுதியில் நேற்று முன்தினம் (08) இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வஹமல்கொள்ளேவ, ரம்பாவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 56 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவருடைய சடலம் ரம்பாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## அஹுங்கல்ல துப்பாக்கிச்சூட்டில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் காயம்

அஹுங்கல்ல பகுதியில் நேற்று (09) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள், அஹுங்கல்ல பகுதியில் உள்ள முச்சக்கரவண்டி நிறுத்துமிடத்தில் இருந்த குறித்த முச்சக்கரவண்டி சாரதி, துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் அஹுங்கல்ல முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் என்றும் போகஹபிட்டியவைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று (09) அதிகாலை 05.50 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த நபர் பலப்பிட்டிய அடிப்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து சந்தேக நபர்களை கைதுசெய்ய அஹுங்கல்ல பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலக சந்தையில் இலங்கையின் பங்கை புத்தாக்க வேலைத்திட்டத்தின் ஊடாக அடைய முடியும்

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நம்பிக்கை

உலக சந்தையில் இலங்கையின் பங்கை புத்தாக்க வேலைத்திட்டத்தினூடாக அடைய முடியுமென்றும் புதிய மாதிரிகள் மூலம் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகுமென்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான வணிக மயமாக்கல் அணுகுமுறையை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''மனிதர்களின் தேவைகள் மாறாதவை.அந்தத் தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் முறை மாத்திரமே மாறும். புத்தாக்கங்கள் ஊடாக அதற்கான மாதிரிகளை உருவாக்க முடியும்.

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பாக இலங்கையில் காணப்பட்ட கொள்கையினால் உலக சந்தையில் தனக்கான சரியான இடத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளது. உலகில் தொழில்நுட்பத்துடன் கூடிய சந்தை மாதிரியில் புதிய புரட்சி ஏற்பட்டுள்ள போதிலும் இலங்கை இன்னமும் தேயிலை, தேங்காய் மற்றும் இறப்பர் போன்ற பழைய பாரம்பரியங்களுக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறது.

தொழில்நுட்பத்துடன் இணைந்து புத்தாக்கங்களைச் செய்த நிறுவனங்களே உலகை



வெற்றி கொண்டுள்ளன. உலகில் முதல் 10 நிறுவனங்களில் 05 நிறுவனங்கள் தொழில்நுட்ப அடிப்படையிலான நிறுவனங்களாகும்.

இலங்கையில் தொழில்நுட்பத் துறை புறக்கணிக்கப்பட்டுள்ளது. உலகின் வளர்ந்த நாடுகள் தொழில்நுட்பத் துறைக்கு முன்னுரிமை கொடுத்து அபிவிருத்தியை நோக்கி நகர்கின்றன.

வறுமை ஒழிப்பு சமூக அவலங்களை ஒழிப்பதற்கானது மாத்திரமல்ல. மாறாக, உரிமைகளின்றி மக்கள் நெருக்கடிக்குள்ளாகின்ற காரணத்தால் புத்தாக்கங்கள் ஊடாக அந்த மக்களுக்கு பொருளாதார செயற்பாடுகள் மற்றும் புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை வழங்குவதற்காகவே கிராமிய வறுமை ஒழிப்பு அவசியப்படுகிறது''- என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி வணிகமயமாக்கலுக்கான அணுகுமுறையை ஏற்படுத்த nirdc.gov.lk என்ற புதிய இணையதளம் இதன்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரதிபலன்களை அறிந்துகொள்ளல், பாராட்டுதல், நடைமுறைப் படுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காகவும் விரைவாக வணிகமயமாக்கவும் 'ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான தேசிய வணிகமய மாக்கல் அணுகுமுறை' [National Initiative for R&D Commercialization (NIRDC)] என்ற புதிய வேலைத்திட்டம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சிரேஷ்ட ஜனாதிபதி ஆலோசகர் கோமிக உடுகமசூரிய ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்துடன் அறிவியல் ஆராய்ச்சி, தொழிற்றுறை,பொருளாதாரம், சட்டம்,கலை, தேசிய மரபுரிமைகள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்ற அழுத்தம் வழங்குங்கள்

## அமெரிக்கத் தூதுவரிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை



ஈழத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப் படுகொலைக்கு சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் வகையில், இலங்கைக்கு எதிரான ஜெனீவாத் தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (08) மாலை கொழும்பில் இடம்பெற்றபோதே அவர் மேற்குறித்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கான சாத்தியமின்மைகள் எழும்போது அவை சார்ந்த அரசியல் நகர்வுகளின் தேவைப்பாடு மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மொரட்டுவ பிரதேச செயலகப் பிரிவின் கிளீன் ஸ்ரீலங்கா மற்றும் பிரதேசத்தின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் மொரட்டுவ மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் மற்றும் மாநகராட்சி மன்றச் செயலாளர் உள்ளிட்ட பிரதேசத்தின் துறைசார்ந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். படம்: எம்.எஸ்.எம்.முன்தஸிர்

# அரச திட்டமிடல் சேவை;143 பேர் நேர்முகப் பரீட்சைக்கு தகுதி

எம்.எஸ்.எம்.முன்தஸிர்

இலங்கை திட்டமிடல் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட திறந்த எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் 143 பேர் நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெற்றுள்ளனர். இந்தப் பொது நேர்முகப் பரீட்சைக்கான தகைமைப் பட்டியலில் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஐவரும் உள்ளடங்கியுள்ளனர்.

இலங்கை திட்டமிடல் சேவையின் மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்புக்காக பரீட்சைகள் ஆணையாளரினால் கடந்த 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் மேற்படி திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் 143 விண்ணப்பதாரிகள் பொது நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவா கியுள்ளனர்.

நேர்முகப்பரீட்சைக்கான தகைமைப் பட்டியலில் ஒருவரின் பெயர் உள்ளடங்கியிருப்பதும் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதும் இலங்கை திட்டமிடல் சேவையில் கட்டாய நியமனத்துக்கு தகுதியாகக் கருதப்படமாட்டாது என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இந்த நேர்முகப் பரீட்சை தொடர்பில் விளக்கமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடப்பாண்டின் இடைப்பகுதியில் பண வீக்கம் ஸ்திரமடையும்

## மத்திய வங்கியின் ஆளுநர் அறிவிப்பு

நாட்டின் பணவீக்கமானது இந்த வருடத்தின் இடைப்பகுதியில் ஸ்திர மட்டத்தை அடையுமென மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் 2025ஆம் ஆண்டுக்கான கொள்கைப் பிரகடனம் கொழும்பில் நேற்று முன்தினம் (08) வெளியிடப்பட்டது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''2025 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் நாட்டின் பணவீக்கம் மீண்டும் வழமைக்குத் திரும்பும். நிதி அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய 5 சதவீதத்தால் பணவீக்கம் ஸ்திரமடையும். 2025 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் திருத்தமாகப் பணவீக்கம் குறைவடைந்துள்ளது. தனியார் துறையினரின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை அதற்கு ஒத்துழைப்பை வழங்கும். வர்த்தகத்துக்கு சார்பான நிலைமைகள் அதில் தாக்கம் செலுத்தும் ஓர் அம்சமாகும். தேசிய விலை நிலைவரங்களில் தாக்கம் செலுத்தும் வெளி அழுத்தங்களைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்குமென எதிர்பார்த்துள்ளோம்'' – என்றார்.

# பெங்களுருவில் எம்.ஜி.ஆரின் 37ஆவது நினைவேந்தல்



புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு கர்நாடக மாநிலம் பெங்ளுருவில் நடைபெற்றது.

சேவா ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். ரவியின் ஏற்பாட்டில் பெங்களுரு தமிழ்ச் சங்க திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மகத்தான ஆளுமையாளர்கள் சிலருக்கு புரட்சித் தலைவரின் நினைவாக கேடயங்கள் வழங்கப்பட்டன. டாக்டர் ஹனீஷா காடூன், பெங்களுரு தொழிலதிபர் ஆர்.ஸ்ரீநிவாசன், ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன், நாகர்கோவில் சுஷ்ருஷா மருத்துவமனையின் உரிமையாளர் டாக்டர் ஆர்.மோகன்தாஸ் ஆகியோருக்கு உரிமைக்குரல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நலிவுற்றோர் நல அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நினைவுக் கேடயங்களை வழங்கினார்கள். இந்த நிகழ்வை புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளர் காஞ்சிபுரம் தியாகராஜன் தொகுத்து வழங்கினார்.

# மூன்று ஒழுங்குவிதிகள் - கட்டளைக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி



அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு ஒழுங்குவிதிகளில் மூன்று ஒழுங்கு விதிகளுக்கும் கட்டளை ஒன்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (07) கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவிலேயே இந்த ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப் பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி குறித்துக் கவனஞ்செலுத்திய குழு, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தரம் தொடர்பில் காணப்படும் பிரச்சினை குறித்தும் அறிக்கையொன்றை வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியது. மேலும், இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சந்தைக்கு வெளியிடப்பட முன்னர் உரிய தரத்தில் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் நடைமுறை தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறும் குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலை யங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளையைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட குழு, ஒப்புதல் அளிப்பதற்கு முன்னர் சட்டத்தை மேலும் ஆராயுமாறு குழுவின் உறுப்பினர்கள் கோரியபடி, ஒழுங்கு முறையை எதிர்வரும் நாட்களில் மீண்டும் ஆராய வேண்டும் என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது. உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடு மற்றும் சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு அமைய நடைமுறைப்படுத்துவதாக இணங்கிக் கொண்டதற்கு அமைய மேலதிக வரிமுறைகளுக்கு (para-tariffs) முகங்கொடுக்கும் அரசாங்கத்தின் ஐந்து வருட திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது.

மேலும், 2010 ஆம் ஆண்டின் 17 இலக்க ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிக்கு அனுமதியளித்த குழு, கடந்த இரண்டு வருடங்களில் சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்துனரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் தனது அதிருப்தியை வெளிப் படுத்தியது.

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பவற்றுக்கும் அரசாங்க நிதி பற்றிய குழு அங்கீகாரம் வழங்கியது. பட்டியலிடப்பட்ட எந்தவொரு நிறுவனமும் இலங்கைக்கு வெளியே 500,000 அமெரிக்க டொலர்கள் வரை முதலீடு செய்வதற்கும் பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கு 150,000 அமெரிக்க டொலர்கள் வரை முதலீடு செய்வதற்கும் இந்த ஒழுங்குவிதி இடமளிக்கின்றது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர்களான சதுரங்க அபேசிங்க, (கலாநிதி) ஹர்ஷன சூரியப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, (கலாநிதி) கௌஷல்யா ஆரியரத்ன, அர்கம் இலியாஸ், நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கோன் மற்றும் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அடுத்த 3 ஆண்டுகளில் 5 முக்கிய துறைகளில் சுகாதார சேவையை மேம்படுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ



இலங்கையில் வாழும் மக்களுக்கு தரமான, சிறந்த மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட இலவச சுகாதார சேவையை தொடர்ந்து வழங்குவதற்காக அடுத்த மூன்று ஆண்டுகளில் ஐந்து முக்கிய துறைகளில் நாட்டின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஆயுர்வேத மருத்துவ சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் அடிப்படைச் சுகாதார சேவையை வலுப்படுத்துதல், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார அமைப்பை வலுப்படுத்துதல், நாட்டில் உள்ள பாரம்பரிய மருந்துகளை உற்பத்தி செய்தல் மற்றும் தரமான மருந்துகளை தொடர்ந்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு வழங்குதல், நாட்டு மக்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மருத்துவ சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல் என ஐந்து முக்கிய துறைகளில் சுகாதார சேவையை சிறந்த நிலைக்கு உயர்த்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பாதுகாப்புச் செயலரைச் சந்தித்த புதிய இராணுவத் தளபதி

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் தூயகொந்தாவை மரியாதை நிமித்தம் நேற்று முன்தினம் (08) சந்தித்தார். கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

லெப்டினன்ட் ஜெனரல் ரொட்ரிகோ இலங்கை இராணுவத்தின் (SLA) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் பாதுகாப்பு செயலாளருடனான முதல் உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும்.

பாதுகாப்புச் செயலாளர், லெப்டினன்ட் ஜெனரல் ரொட்ரிகோவின் நியமனம் குறித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், இலங்கை இராணுவத்தை அவரது தலைமையின் கீழ் மேலும் உயர்நிலைக்கு கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

லெப்டினன்ட் ஜெனரல் ரொட்ரிகோ கடந்த 31 டிசம்பர் (2024) அன்று இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாகக் கடைமையேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலை நகரை தூய்மைப்படுத்தும் விசேட செயற்றிட்டம்





*சீனக்குடா செய்தியாளர்*

கிளீன் ஸ்ரீலங்கா எனும் தொனிப்பொருளில் திருகோணமலை நகரைத் தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் தே.ஜெயவிஷ்ணுவின் வழிநடத்தல் மற்றும் தலைமையில் நகராட்சி மன்றம் தனது சேவையை விஸ்தரிக்கும் முகமாக விசேட பணிக்குழு ஊடாக மேற்பார்வை செய்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக புதன்கிழமை (08) கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட விசேட கள விஜயத்தில் பழுதடைந்த மீன்கள் மற்றும் கருவாடுகள் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றை அகற்ற உடன் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இதன் அடுத்த கட்டமாக பஸ்தரிப்பு நிலையங்களைச் சுத்திகரித்து இருக்கைகள் மற்றும் கைபிடிக் கம்பங்களை வர்ணம் பூசி புதுப்பொலிவுபடுத்தியதுடன், மின்விளக்குகளும் பொருத்தப்பட்டன. முறைப்பாடுகளுக்கமைய திண்மக்கழிவு அகற்றும் முறைமையில் சற்று வித்தியாசமாக ஒரு வலயத்துக்கு இரண்டு வாகனங்கள் என்ற அடிப்படையில் விசேட திட்டமொன்றையும் அமுல்படுத்தி அதில் வெற்றிகண்டுள்ளனர்.

குறிப்பிட்ட இந்த வேலைகளை ஊழியர்கள் இரவு பகல் பார்க்காமல் செய்து வருகின்றதுடன் வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கின்ற வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் கனத்த மழை



*காரைதீவு செய்தியாளர்*

கடந்த ஒரு வாரமாக கிழக்கு மாகாணப் பகுதியில் நிலவிவரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து பரவலாகப் பெய்து வரும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ள நீரால் சூழ்ந்து காணப்படுகின்றன.

சீரற்ற காலநிலை மாற்றங்கள் அடிக்கடி மாறுபட்டு வருகின்றமையால் அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக பனிமூட்டங்களும் கடும் குளிரும் நிலவுகின்ற அதேவேளை, வியாழக்கிழமை அதிகாலையில் இருந்து தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழையால் பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, காரைதீவு பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் பொதுமக்களின் தொழில்துறைகளும் முடங்கிய நிலையில் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் பலி



*திருக்கோவில் மேலதிக செய்தியாளர்*

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமாரி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் நபரொருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை(09) இடம்பெற்றுள்ளது.

இதன்போது டபிள்யூ.ஏ.பெண்டிஸ் அப்பு விஜயசிறி என்ற விசேட தேவையுடையவரே உயிரிழந்துள்ளதுடன் இவர் மூன்று சக்கர சைக்கிளில் பயணிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை கோமாரி பிரதான வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் இல்லங்களுக்கு உதவிகள் வழங்கிவைப்பு



*நாவிதன்வெளி செய்தியாளர்*

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வீரமுனை சீர்பாத தேவி சிறுவர் இல்லம் மற்றும் அஸ்ஸலாம் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை(08) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டிருந்தார்.

முதற்கட்டமாக மெத்தை மற்றும் நுளம்பு வலை ஆகியவை வழங்கப்பட்டதுடன் இல்லங்களின் குறைபாடுகளை பிரதேச செயலாளர் கேட்டறிந்து கொண்டார். பின்னர் அதனை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதேச செயலாளர் பணிப்புரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.ஏ.சாபீர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே.குறைசா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டீ.முஜாஹீடீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விசேட தேவையுடையோருக்கு உதவிகள் வழங்கல்







*வீரமுனை செய்தியாளர்*

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு விசேட தேவையுடையவர்களுக்கான நுளம்புவலை, சுயதொழிலுக்கான நிதி மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலகமும் கதிரவன் மாற்றுத்திறனாளிகள் சங்கமும் இணைந்து லண்டன் வேல்தஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அனுசரணையுடன் பிரதேச செயலாளர் ரங்கநாதன் தலைமையில் நடத்தின. இந்நிகழ்வில் எஸ்.பகீரதன், அகிலன் பவுண்டேஷன் இலங்கைக்கான இணைப் பாளர் வீ.ஆர்.மகேந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது 250 குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.



இந்திய அரசின் உலருணவுப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இந்திய - இலங்கை 75 வருட ஆண்டு கால இராஜதந்திர உறவை முன்னிட்டு ‘இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்’ எனும் தொனிப்பொருளில் கடந்த மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வுலருணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வேண்டுகோளுக்கமைவாக 750 உலருணவுப் பொதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளன. இந்நிகழ்வின்போது பிரதம கணக்காளர் திருமதி காயத்திரி ரமேஸ், கணக்காளர் எம்.வினோத் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**படம்:** *மட்டக்களப்பு*





நிந்தவூர் அல்-முஸ்னா முன்பள்ளி பாலர் பாடசாலையின் ஏழாவது ஆண்டு விடுகை விழாவும் விளையாட்டு நிகழ்வும் பாடசாலையின் அதிபரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான எம்.ஏ.மஸூர் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நிகழ்வில் சிறப்பு அதிதியாக இலங்கையின் இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான சுலைமான் ஷாபி கலந்து கொண்டார். மேலும், நிந்தவூர் பிரதேச சிறுவர் நன்னடத்தை முன்பள்ளி உத்தியோகத்தர் ஐ.எம்.ஹப்றத், பிரதேச செயலக முகாமைத்துவ உத்தியோகத்தர் லாபிர், ரியோ ஐஸ்கிரீம் நிறுவனத் தலைவர் ஹிஸ்ரத், Digi Brother நிறுவனத்தின் பணிப்பாளர் றிப்கி மற்றும் ஏனையோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.





திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார நேற்று வியாழக்கிழமை(09) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். திருகோணமலை மாவட்ட செயலகத்தில் சர்வமத ஆசீர்வாதத்துடன் நடைபெற்ற பதவியேற்கும் நிகழ்வின்போது அரசாங்க அதிபரை மாவட்டத் திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள் வரவேற்றனர்.

**படம்:** *சீனக்குடா செய்தியாளர்*





சீன அரசினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட உலருணவுப் பொதிகள் வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு நேற்று வியாழக்கிழமை (09) வழங்கப்பட்டன. வெருகல் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் சோ.சௌமியா, நிர்வாக கிராம உத்தியோகத்தர் சிறிகாந்தராசா காளிப்பிள்ளை மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து இவ்வுலருணவுப் பொதிகளை வழங்கினர்.

**படங்கள்:** *மூதூர் செய்தியாளர்*





மூதூர் பிரதேச செயலகப் பகுதியில் ஏற்பட்ட கடும்காற்று, கனமழை காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகள் 10 குடும்பங்களுக்கும் மற்றும் வெள்ள நிலைமையின்போது பாதிப்படைந்த 100 குடும்பங்களுக்கான சீனாவின் சகோதரத்துவ உலருணவுப் பொதிகளும் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் வழங்கப்பட்டன.

**படங்கள்:** *கந்தளாய் செய்தியாளர்*






கிட்ஸ் கார்டன் முன்பள்ளியின் 08ஆவது வெளியேற்று விழா மீராவோடை அமீர் அலி மண்டபத்தில் அஸ்பேக் அக்கடமி பணிப்பாளர் ஏ.எல்.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது. ஓய்வுபெற்ற முன்னாள் அதிபரும் சிராஜ் அரபுக் கல்லூரியின் கல்விப் பிரிவுப் பொறுப்பாளருமான ஏ.எல்.நைனா முஹம்மட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக எம்.என்.எம்.யாசீர் அரபாத், எம்.எம்.ஹக்கீம் மற்றும் பெற்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வாகன வருமான வரிக் கட்டணங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குக

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. கோரிக்கை



(கோணாவத்தை செய்தியாளர்)

பிரதேச செயலகங்களில் அறவீடு செய்யப்பட்டு வரும் வாகன வருமான வரிக் கட்டணங்களில் ஒரு பகுதியளவையேனும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேட்டுக்கொண்டார்.

புதன்கிழமை (08) பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

உள்ளூராட்சி மன்றங்களானது வீதிகள், வடிகான்கள், பொதுச் சந்தைகள், களியாட்ட இடங்கள், மைதானங்கள், மயானங்கள், நூலகங்கள், திண்மக் கழிவகற்றல் போன்ற பல்வேறு சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றது. அதற்கும் மேலதிகமாக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபமொன்றில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவில் 40 வீதத்தை சபையின் நிதியிலிருந்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது.

இவ்வாறான நிலையில், முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணங்கள், சொத்துகளுக்கான வரிகள் போன்றவற்றைக் கொண்டே உள்ளூராட்சி மன்றங்கள் வருமானம் ஈட்டிக்கொள்கின்றன. அதேபோல, கடந்த காலங்களில் வீதிகளில் பயன்பாட்டிலிருந்த மாட்டு வண்டிக்கான வரி, துவிச்சக்கர வண்டிக்கான வரி போன்றவை அறவீடு செய்யப்பட்டு வந்திருந்தாலும் தற்காலத்தில் அவற்றின் பாவனை குறைவடைந்துள்ளமையால் அவ்வரி அறவீடு நடைமுறையில் இல்லை.

ஆகையால், பிரதேச செயலகங்களில் அறவீடு செய்யப்பட்டு வருகின்ற வாகன வருமான வரிக் கட்டணங்களை பங்கீட்டு வரிப் பட்டியலில் இணைத்து அதில் ஒரு பகுதியளவையேனும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கினால் அதனுடைய சேவைகளை வினைத்திறன் மிக்கதாக கொண்டுசெல்ல முடியுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், கடந்த 13 வருடங்கள் உள்ளூராட்சி மன்றமொன்றின் தலைவராகச் செயற்பட்டு வந்த அனுபவத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களை நிர்வகிக்கும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் பல நிர்வாக அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வேலைத்தொழிலாளிகள், சுகாதாரத் தொழிலாளிகள் போன்ற ஆளனி தட்டுப்பாடுகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கவனத்தில் எடுக்குமாறும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

# ரோஹிங்யா முஸ்லிம்கள் விடயத்தில் அரசு தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் நளீம் வலியுறுத்து



(செங்கலடி செய்தியாளர்)

''மியன்மாரிலிருந்து புகலிடம் கோரி இலங்கையில் தஞ்சமடைந்த ரோஹிங்யா முஸ்லிம்கள் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்'' - என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் தெரிவித்துள்ளார்.

இனவாதத்தை முதலீடு செய்து ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் மியன்மாரிலிருந்து தஞ்சம் கோரி வந்த ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு இலங்கையில் புகலிடமளிக்கப்பட்ட வரலாற்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

ஏறாவூரில் செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இனவாத அரசாங்கம் எனக் கூறப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் மியன்மாரிலிருந்து தஞ்சம் கோரிவந்த ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு இலங்கையிலே புகலிடமளிக்கப்பட்டது. ஆனால், பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஆதரவு வழங்கிய அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியின் ஆட்சியில் புகலிடம் மறுக்கப்படுகிறது. இந்த விடயத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் சிறுபான்மை சமூகத்தைப் பிரித்தாளும் கைங்கரியத்தைக் கையாண்டனர். ஆனால், புதிதாக ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜனாதிபதி அநுரகுமாரவும் இன, மத பேதங்களைக் கடந்த ஒரு சமத்துவமான நிலையை உருவாக்கியுள்ளார்கள். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்ல விடயங்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எப்போதும் ஆதரவளிக்கும். முஸ்லிம் சமூகம் அல்லது நாட்டு மக்கள் பாதிக்கப்படும் வகையில் திட்டங்களைக் கொண்டுவந்தால் அதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்கள் பயங்கரவாதம் என்ற மாயையை ஏற்படுத்தி ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து தமிழ் பிரதேசங்களில் தமிழ் அதிகாரிகளும் முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் அதிகாரிகளும்தான் இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கினார்கள். இவ்வாறு இன ரீதியாக அரச அதிகாரிகள் நியமிக்கப்படுவதால் மக்கள் மத்தியில் சந்தேகப் பார்வை ஏற்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும். ஒவ்வொரு அலுவலகங்களிலும் நியமிக்கப்படும் உயரதிகாரிகள் மூன்று சமூகங்களையும் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கும் போதுதான் பொதுமக்களிடையே நம்பிக்கை ஏற்படும். இதனை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்'' - என்றார்.

# அக்கரைப்பற்று மாநகர பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்பூட்டல்



(சாய்ந்தமருது செய்தியாளர்)

நாடளாவிய ரீதியில் பரவிவருகின்ற எலிக்காய்ச்சல் தொடர்பாக அக்கரைப்பற்று மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களை தெளிவூட்டுவதற்காக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை (08) அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது.

இதன்போது எலிக்காய்ச்சல் பரவும் வழிமுறைகள் மற்றும் அதற்கான சூழல்கள் பற்றியும் எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும் விபரிக்கப்பட்டு, அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முனவ்வர், அக்கரைப்பற்று மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி சமீனா ஹம்தூன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.பௌமி, வேலைகள் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.சலீத் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறிதல்




(மட்டக்களப்பு)

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுமக்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் கூட்டம் புதன்கிழமை(08) மட்டக்களப்பில் நடைபெற்றது.

முன்மொழியப்பட்ட மின்சாரக் கட்டணம் தொடர்பான ஆலோசனையைக் கேட்கும் கூட்டம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் லலித் சந்திரலால் தலைமையில் மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மின்சாரக் கட்டணம் தொடர்பான ஆலோசனைகளை பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இக்கூட்டம் இடம்பெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க, பிரதிப்பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலந்த சபுமானகே, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயலாளர் நதிஜா வரப்பிட்டிய மற்றும் இலங்கை மின்சார சபையின் உயரதிகாரிகள் என இதில் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த பொதுமக்கள் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் கூட்டத்தில் அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், வைத்தியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துறைசார் வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 43 பேர் தங்களது கருத்துகளை முன்வைத்ததுடன் சுமார் 80 நபர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிரான்குளத்தில் இலவச இருதய மாற்று சத்திரசிகிச்சைக் கூடம் திறந்து வைப்பு




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாய் சஞ்சீவனி வைத்தியசாலை கடந்த 01.06.2023 அன்று தனது கெத் லேப் சேவையை ஆரம்பித்தது. 18 மாதங்கள் கடந்த நிலையில் 2,000 நோயாளர்களுக்கு மேல் இலவச இருதய சிகிச்சைகளை மட்டக்களப்பு போதான வைத்தியசாலை இருதய மருத்துவப் பிரிவுடனும் கல்முனை ஆதார வைத்தியசாலை வசதிகளையும் பயன்படுத்தி மிகச் சிறப்பாக செயற்படுத்திவருகின்றது.

இங்கே முற்றுமுழுதாக இலசவ சேவையே வழங்கப்பட்டு வருகின்றது. இதன் அடுத்த கட்டமாக இருதயமாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான சத்திரசிகிச்சைக் கூடம் மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு என்பன கடந்த 04.01.2025 அன்று இவ்வைத்தியசாலையின் நிறுவுனர் சற்குரு மதுசூதனன் சாயினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிரிக்கெட் ஜாம்பவான்களான அரவிந்த டி சில்வா, முத்தையா முரளிதரன், சமிந்தவாஸ், அஜந்த மெண்டிஸ் மற்றும் இவ் வைத்தியசாலையின் இலங்கை தலைமை அதிகாரி பென்னி ஜெயவர்த்தன, பணிப்பாளர் ரமேஸ் ராவ், பொது முகாமையாளர் டேவிட் சில்வஸ்டர், பணிப்பாளர்களான டீபால் விக்கிரமசிங்க, சுதர்சனம் தர்மரெட்ணம், நிசாந்த இவர்களுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி இரா. முரளீஸ்வரன், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் க.கலாரஞ்சினி, இருதய வைத்திய நிபுணர்களான வினோதன், ரஜீவன் பிரான்சிஸ் மற்றும் சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இச்சேவையானது பெரும் வரப்பிரசாதமென்றே கூறவேண்டும். கடந்த காலங்களில் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றே இச்சேவையை மட்டக்களப்பு வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு மேற்கொண்டு வந்திருந்தது. தற்போது எமது பிரதேசத்திலும் இச் சேவை காணப்படுவதனால் மிக வேகமாக எமது மக்களுக்கு சேவை வழங்கக்கூடியதாக உள்ளது.

# வீதிகளின் பெயர் விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டமையினால் மக்கள் சிரமம்

## தற்காலிக ஏற்பாடுகளையாவது மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டு



(பாறுக் ஷிஹான்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட விளம்பர பெயர்ப்பலகைகள் பல அகற்றப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, சாய்ந்தமருது, மாவடிப்பள்ளி, காரைதீவு உள்ளிட்ட சில பகுதிகளின் விளம்பரப் பலகைகளே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.

மேற்படி விளம்பரப் பலகைகள் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதுடன் இடங்களின் பெயர்களும் தெளிவற்றதாகக் காணப்பட்டதாக ஆர்வலர்கள் சிலரால் சமூக ஊடகங்களில் வெளிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பெயர்ப் பலகைகள் திடீரென அகற்றப்பட்டபோதிலும், தற்காலிகமான எந்தவொரு ஏற்பாடும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வெளியிடங்களிலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு சுற்றுலா வரும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



***செங்கலடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சார்பாக பாடசாலையின் ஒருபகுதி கல்லூரியின் 2010 க.பொ.த. மற்றும் 2013 உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களினால் செவ்வாய்க்கிழமை (07) துப்புரவு செய்யப்பட்டது. தவணை விடுமுறை முடிவடைந்துள்ள நிலையில், பாடசாலையில் குப்பை கூளங்கள் அதிகமாக நிறைந்துள்ள இப்பகுதிகளில் டெங்கு நோய் பரவலைத் தடுக்கும் வகையில் பாடசாலை அதிபர் வ.சுவர்னேஸ்வரனின் வேண்டுகோளுக்கமைய இவ்வேலைத்திட்டம் குறித்த பிரிவு பழைய மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கல்லடி செய்தியாளர்)***

# சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் தொடர்பில் செயலமர்வு





(ஒலுவில் விசேட செய்தியாளர்)

பிரஜைகளை வலுவூட்டும் வேலைத்திட்டம் சம்பந்தமாக உத்தியோகத்தர்களை அறிவூட்டும் செயலமர்வு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்டங்கள் தோறும் நடத்தப்படுகிறது. அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மேற்படி வேலைத்திட்டம் நடைபெறுகிறது.

அதற்கமைவாக, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீமின் பங்குபற்றலுடன் தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மதுல்லா தலைமையில் திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், திட்ட உதவியாளர் முஹாஜிர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் புதன்கிழமை(08) நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இச் செயலமர்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இஸட்.அப்துல் றகுமான் கலந்துகொண்டு விரிவுரை நடத்தினார்.

# பாரிய சோலார் திட்டம் ஆரையம்பதியில் திறந்துவைப்பு





(காத்தான்குடி செய்தியாளர்)

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் அல்ட்றா அலுமினியம் தனியார் நிறுவனம் கிழக்கிலங்கையில் மிகப் பாரிய சோலார் திட்டத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்றது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி 02 மெகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் சோலார் திட்டத்தை இலங்கை மின்சார சபையின் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் டபிள்யூ.எஸ்.எல்.ஏ.விஜயதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அல்ட்றா நிறுவனத்தில் திறந்து வைத்தார்.

அலுமினிய கட்டுமான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் இத்தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரம் இத்திட்டத்தினூடாகக் கிடைக்கின்றது. இதனூடாக வருடத்துக்கு 2.9 மில்லியன் கிலோ வோட் அளவிலான மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.

நிறுவனத்தின் தலைவர் ஏ.எம். உனைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் ரீ.சுமன், ஹயர் எனர்ஜி நிறுவனத்தின் பணிப்பாளர் கலீல் மஜீட், கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டதுடன், திணைக்களங்களின் உயரதிகாரிகள், ஊர்ப்பிரமுகர்கள், அலுமினிய துறை உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் அலுமினிய தொழிற்சாலையையும் பார்வையிட்டனர்.

இந்நிறுவனமானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற ISO 9001:2015 தரச் சான்றிதழை கடந்த டிசம்பர் 24ஆம் திகதி பெற்றுக்கொண்ட மட்டக்களப்பின் முதல் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு







(மத்திய முகாம் செய்தியாளர்)

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு நாவிதன்வெளி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(07) இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.கியாஸ்கான், கே.சுபாசினி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் முறை, அதன் நன்மைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கிராம உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் மனோஜ் இந்ரஜித், கிராம உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
businessthamilan@gmail.com

# ஃபெரெண்டினோ டயர்களின் உலக சந்தை விஸ்தரிப்பும் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு கணிசமான நன்மைகளும்





ஃபெரெண்டினோ டயர் தனது வெற்றிகரமான பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக 38 உலகளாவிய சந்தைகளுக்கான ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளது என்ற சாதனையை அறிவிப்பதில் பெருமிதமடைகின்றது. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றம் பெற்ற ஃபெரெண்டினோ டயர் தயாரிப்புகள் மற்றும் குறிப்பிடத்தக்க உற்பத்தி முன்னேற்றம் என்பவற்றினூடாக இலங்கை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பொருளா தாரப் பின்னடைவிலிருந்து மீட்சி பெறும் நோக்கில் இலங்கையின் நுகர்வோருக்கு குறைந்த விலையில் டயர்களை வழங்குவதற்கான வழிகளையும் ஃபெரெண்டினோ வெளிப்படுத்தியது. இந்த முயற்சியானது பாதுகாப்பு, தரம் மற்றும் சௌகரியம் போன்ற வற்றினால் பெயர்பெற்ற முன்னணி சர்வதேச டயரை சாதாரண விலையில் இலங்கை நுகர்வோர் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துகின்றது.

இதன் விளைவாக உலகளாவிய தரத்துடன்கூடிய உயர்தர சர்வதேச டயர் வர்த்தக நாமத்தை ஏனைய சர்வதேச வர்த்தகநாமங்களை விட குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு இலங்கையின் வாகன ஓட்டுநர்களுக்குக் கிடைத்துள்ளது. இந்த முயற்சியானது சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்குவதுடன், தரத்தில் எவ்வித சமரசமும் செய்யாமல் விதிவிலக்கான மதிப்பை வழங்குகின்றது. அத்துடன், பூகோள ரீதியான அல்லது முகவர்கள் அடிப்படையிலான விலை வேறுபாடுகளைக் களைந்து கொழும்பு முதல் காத்தான்குடிவரை நாடு முழுவதிலும் நிலையான விலையை உறுதிப்படுத்துகின்றது.

வட அமெரிக்கா, ஐரோப்பா, தென் அமெரிக்கா மற்றும் வளைகுடா பிராந்தியங்கள் முழுவதுக்குமான முக்கிய சந்தைகளைத் திறந்து கடந்த ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட மதிப்புமிக்க சான்றிதழ்களால் ஃபெரெண்டினோவின் உலகளாவிய வெற்றி பறைசாற்றப்படுகின்றது. இந்தச் சாதனைகள் டயர் துறையில் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாளர் என்ற ஃபெரெண்டினோவின் நிலையை உறுதிப்படுத்துகின்றது.

# நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் மேலும் 500 கிராமப்புற குடும்பங்களுக்கு உதவி





தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நீண்ட கால செயற்றிட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் 500 கிராமப்புறக் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டமானது அண்மையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கை தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஒத்துழைப்புடன் எட்டு ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள இந்த செயற்றிட்டமானது, இலங்கையில் தென்னைப் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தும் இலட்சியத்துடன் தமது வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சுமார் 5,000 பேருக்கு கலப்பு தென்னங்கன்றுகள் மற்றும் ஏனைய வளங்களை வழங்கி ஆதரவளித்துள்ளது. நேரடி பயிற்சி நிகழ்வுகளை நடத்தியும் பயிர்ச்செய்கைக்கு உரத்தை வழங்கியும் தென்னைப் பயிர்ச்செய்கையில் மிகச் சிறந்த நடைமுறைகள் குறித்து பயனாளிகளுக்கு பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளையும் இச்செயற்றிட்டம் கொண்டுள்ளது.

இந்த அரச-தனியார் கூட்டாண்மை குறித்து தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வவுனியா பிராந்திய முகாமையாளர் மஞ்சுள ஹேவமலவி தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கையில், “நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி இன்னும் கூடுதலான கிராமப்புற குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதையிட்டு நான் மிகுந்த பெருமை கொள்வதுடன் நன்றியையும் வெளிப்படுத்த விரும்புகின்றேன். கடந்த காலங்களில் இந்த நல்முயற்சியானது பாரம்பரியமாக தென்னை வளர்ப்பில் ஈடுபடாத பிரதேசங்களில் தென்னை வளர்ப்பை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளதுடன் அறிவைப் பகிர்வதற்கான மேடையாகவும் திகழ்ந்து, பயிர்ச்செய்கை நுட்பங்களை மேம்படுத்தி, சவால்களுக்கு தீர்வு கண்டு மற்றும் தென்னை வளர்ப்புக்கான புதிய வழிமுறைகளை ஆராய்வதற்கு உதவியுள்ளது” - என்று குறிப்பிட்டார்.

# புத்தாக்கம் - சிறப்புக்காக சர்வதேச விருதுகளை சுவீகரித்த யூனியன் அஷ்யூரன்ஸ்





Union Assurance Shines with Multiple Prestigious Global Awards

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குனரான யூனியன் அஷ்யூரன்ஸ், பல சர்வதேச விருதுகளை வெற்றியீட்டியுள்ளதனூடாக தொழிற்றுறையில் தனது தலைமைத்துவத்தை மீண்டும் உறுதி செய்துள்ளது. Gazet International வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில், ‘இலங்கையின் மிகவும் புத்தாக்கமான ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனர் – 2024’ எனும் விருது, Global Brands Magazine விருதுகள் வழங்கும் நிகழ்வில் ‘டிஜிட்டல் ரீதியில் முன்னோடியான ஆயுள் காப்புறுதியாளர் 2024’ மற்றும் World Economic Magazine விருதுகள் வழங்கும் நிகழ்வில் ‘இலங்கையில் அதிகம் விரும்பப்படும் ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம் – 2024’ ஆகிய விருதுகளை சுவீகரித்துள்ளது. புத்தாக்கம், தொழில்நுட்பம் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை போன்றவற்றினூடாக இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையை மாற்றியமைப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் ஒப்பற்ற அர்ப்பணிப்பை உறுதிசெய்வதாக இந்த விருதுகள் அமைந்துள்ளன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம செயற்பாட்டு அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், “ஒவ்வொரு நபர்களுக்கும் முன்னேற்றத்துக்கு அவசியமான வலிமை மற்றும் நம்பிக்கையை வழங்கி அவர்களின் பிரத்தியேகமான பயணத்துக்கு நாம் அர்ப்பணிப்புடன் வலுவூட்டுகின்றோம். இந்த அர்ப்பணிப்பின் காரணமாக, எமது வாடிக்கையாளர்களின் பரிபூரண நலன் தொடர்பில் கவனஞ்செலுத்தி பொருத்தமான தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது. எமது சேவையின் ஒவ்வொரு அம்சத்தையும் தொடர்ச்சியான புத்தாக்கத்துக்குட்படுத்துவது மற்றும் மேம்படுத்துவது போன்றவற்றில் நாம் காண்பிக்கும் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இந்த விருதுகள் அமைந்துள்ளன. எமது சிறப்புக்காக கௌரவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நாம் பெருமை கொள்வதுடன், இந்தக் கௌரவிப்புகளினூடாக ஆயுள் காப்புறுதிக் கட்டமைப்பில் தொடர்ந்தும் வரையறைகளுக்கப்பால் இயங்குவதற்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. அதனூடாக எமது காப்புறுதிதாரர்களுக்கும் சமூகத்துக்கும் சிறந்த பெறுமதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்” - என்றார்.

# வெற்றியைக் கொண்டுவரும் ‘NLB ஜய’





ஆறு தசாப்த காலத்துக்கும் அதிகமாக ஏராளமானவர்களின் வாழ்க்கையை உயர்த்தி நாடு முழுவதும் வெற்றியாளர்களை உருவாக்கி, நாட்டின் அபிவிருத் திக்கு நேரடியாகப் பங்களிப்பை வழங்கும் முன்னணி அரச நிறுவனமாக தேசிய லொத்தர் சபையை அறிமுகப்படுத்தலாம்.

இந்த சமூகப் பணிக்கு மேலதிகமாக நாளாந்தம் இருபது இலட்ச வெற்றியாளர்கள், பத்து இலட்ச வெற்றியாளர்கள் மற்றும் இலட்சாதிபதிகள் போல் கோடீஸ்வர வெற்றியாளர்களை நாட்டுக்கு உருவாக்கும் தேசிய லொத்தர் சபையானது கையிலே காசுக்காக, ஆகக் குறைந்த அதிர்ஷ்ட பந்துகளைப் பாவித்து அதிகளவான வெற்றி வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் ‘NLB ஜய’ லொத்தரை புதிய வருடப் பிறப்பிலே வாடிக்கையாளர் கைகளிலே வழங்கியுள்ளது. இந்நிகழ்வானது சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, தேசிய லொத்தர் சபைத் தலைவர் எம்.டீ.சீ.ஏ.பெரேரா, பொது முகாமையாளர் ஏ.எம்.ஆரிஃப் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

நாளாந்தம் ரூ.5,00,000/, ரூ.50,000/, ரூ.2,000/-, ரூ.200/- மற்றும் ரூ.40/- வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்கிலே சந்தைக்கு விநியோகிக்கப்படும் ‘NLB ஜய’ லொத்தரின் முதலாவது சீட்டிழுப்பானது விசேட சீட்டிழுப்பாக 2025 ஜனவரி 31இல் இழுக்கப்படவுள்ளது.

இந்த விசேட சீட்டிழுப்பிலே வழமையான பரிசுகளை விட மேலதிகமாக கவர்ச்சியான KUV மோட்டார் வாகனமொன்று, மில்லியன் பரிசு வெற்றியாளர்கள் மற்றும் இலட்சாதிபதிகளை உருவாக்குவதற்கு தேசிய லொத்தர் சபையானது தயாராகவுள்ளது.

# SLT-MOBITEL ‘Cash Bonanza’ இடமிருந்து பணப் பரிசுகள் அடங்கலாக பெருமளவு வெகுமதிகள்





கடந்த காலங்களில் மில்லியனர்களை உருவாக்கியமைக்காக புகழ்பெற்றுள்ள SLT-MOBITEL இன் ‘Cash Bonanza’ தற்போது மேலும் பல வெகுமதிகளை வழங்க முன்வந்துள்ளது. ரூ. 12 மில்லியன் பரிசுத் தொகையிலிருந்து புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு பணப் பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

ரூ. 100 எனும் சிறிய தொகையை ரீசார்ஜ் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரீலோட்டைப் பயன்படுத்தி பிளான் ஒன்றை செயற்படுத்திக் கொள்ளல் அல்லது SLT-MOBITEL மொபைல் இணைப்பைப் பயன்படுத்தி கட்டணப் பட்டியல் கொடுப்பனவை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இந்த வெற்றியாளர் தெரிவில் உள்வாங்கப்படுவதற்கான தகைமை வழங்கப்படுவதுடன், கவர்ச்சியான வெகுமதிகளை வெல்வதற்கான வாய்ப்பையும் வழங்கும். 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் 2025 ஜூன் 30 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் Cash Bonanza இனால் வெற்றியீட்டுவதற்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில், மாபெரும் இறுதிப்பரிசு வெற்றியீட்டும் வாய்ப்பு வழங்கப்படுவதுடன், அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு ரூ. 3 மில்லியன் பெறுமதியான பணப் பரிசை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும் ரூபா ஒரு மில்லியன் பரிசுத் தொகையை மாதாந்தம் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் விறுவிறுப்பான நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்படும் Cash Bonanza 2025 வெறும் வெகுமதிகள் என்பதற்கப்பால் செல்வதாக அமைந்திருக்கும். இந்தத் திட்டம் மக்களுக்கு தொடர்புகளைப் பேணல், விநோத அம்சங்களில் ஈடுபடல் மற்றும் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பை வழங்கும். தொலைத்தொடர்பாடல் துறையில் இலங்கையின் மாபெரும் வாடிக்கையாளர் வெகுமதித் திட்டமாக அறியப்படுவதுடன், Cash Bonanza இனால் அனைவரும் வெற்றியாளராகத் திகழ்வதற்கான வலுவூட்டலும் வழங்கப்படுகின்றது.

# 2025 ஐ வரவேற்ற RDB வங்கி







நாட்டிலுள்ள அரசுக்குச் சொந்தமான முதன்மையான மேம்பாட்டு வங்கி RDB யானது புத்தாண்டு விழாவை சமீபத்தில் வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் நடத்தியது.

சம்பிரதாய ரீதியிலான ‘செத்பிரித் ஓதுதல்’,பல்வேறு மத அனுசரிப்புகளுடன் இது நடத்தப்பட்டது. பணியாளர்கள் உரையாற்றும்போது, தலைவர்கள் மற்றும் பொது மேலாளர்/தலைமை நிர்வாக அதிகாரி, அனைத்து வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் 2025 புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிகழ்வில் வங்கியின் பெருநிறுவன மற்றும் நிர்வாக நிர்வாகம், தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர். இதேபோன்ற நிகழ்வுகள் பிராந்திய முகாமைத்துவத்தின் பங்குபற்றுதலுடன் தீவு முழுவதும் கிளை வலையமைப்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலின சமத்துவத்தை வலுப்படுத்துவதில் தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ள டயலொக்

Dialog

In support of

WOMEN’S EMPOWERMENT PRINCIPLES

Established by UN Women and the UN Global Compact Office

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அதிகாரமளிப்பு கொள்கைகளில் (WEPs) கையொப்பமிட்டு, பாலின சமத்துவத்துக்கான தனது அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (DEI) ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு பணியிடத்தை உருவாக்குவதில் டயலொக் உறுதியாகவுள்ளது. மேலும், இந்த WEPs கொள்கைகள் நிறுவனத்தின் DEI முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும்.

இந்த முக்கியமான அங்கீகாரம், பணியிடம், சந்தை மற்றும் சமூகம் ஆகியவற்றில் பெண்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் டயலொக்கின் முயற்சிகளை மேலும் உறுதிப்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அதிகாரமளித்தல் கோட்பாடுகளை (WEPs) பின்பற்றி, அனைத்து ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதிலும் மனித உரிமைகளை மதிப்பதிலும் பணியாளர்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் டயலொக் உறுதியாக உள்ளது.

டயலொக், பாலின சமத்துவத்துக்கு முன்னுரிமை அளித்து, பெண்களுக்கு சம வாய்ப்புகளை வழங்க உறுதிபூண்டுள்ளது. DEI டயலொக்கின் பணியிட கலாசாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். ஐ.நாவின் WEPs கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் டயலொக் தனது பணியாளர்களுக்கு நியாயமான மற்றும் சமமான சூழலை உருவாக்குகிறது. டயலொக் தனது ஊழியர்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்தவும் உறுதிபூண்டுள்ளது.

டயலொக் நிறுவனம், பாலின சமத்துவத்தை வலுப்படுத்துவதில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நிர்வாகத்தில் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், சமூக நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல் திட்டங்கள் மூலமாக பாலின சமத்துவத்தை ஆதரிக்கிறது. Yeheli போன்ற பெண்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகளை மேம்படுத்துதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வதுடன், சமூக நடவடிக்கைகளால் பாலின சமத்துவத்துக்கான ஆதரவை வழங்குகிறது. IDE (இணக்கம், பல்வகைமை மற்றும் சமவுடைமை) மீது டயலொக் நிறுவனம் தெளிவான இலக்குகளை நிர்ணயித்து, உறுதியாக செயற்படுகிறது. வேலை இடங்களில் மகளிர் மையமிடப்பட்ட கொள்கைகள், பணிச்சுமை தடுப்பு மற்றும் பல்லின சீரிய செயற்பாடுகள் மூலம் மகளிருக்கு ஆதரவான சூழலை உருவாக்குகிறது. ஊழியர்களுக்கும் வெளிப்புற பங்காளிகளுக்கும் (SMEs), பள்ளிமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி வழங்குவதுடன், பாலின சமத்துவத்துக்கான முன்னேற்றங்களை பொது வெளியில் அறிக்கைகளாகவும் வெளியிடுகிறது.

# ஆறுதல் வெற்றியீட்டி அதை சாதனை வெற்றியாக மாற்றுமா இலங்கை?






(அகீல் சிஹாப்)

சுற்றுலா இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை சனிக்கிழமை ஒக்லாந்தில் நடைபெறும் நிலையில் இலங்கை அணி ஆறுதல் வெற்றிபெறும் முனைப்பில் களமிறங்குகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைப்பந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதல் தொடரான ரி20 தொடரை நியூஸிலாந்து அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், அடுத்து 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிங்டனில் ஆரம்பமாகியது.

முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி 09 விக்கெட்டுகளினால் அபார வெற்றியீட்டிய நிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற 2ஆவது போட்டியிலும் 113 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டி இன்னும் ஒரு ஆட்டம் எஞ்சிய நிலையில் தொடரை 2-0 என வசப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இறுதி ஆட்டம் நாளை சனிக்கிழமை ஒக்லாந்தில் நடைபெறுகிறது. பகலிரவு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இலங்கை அணி, நியூஸிலாந்து மண்ணில் இறுதியாக கடந்த 2015 டிசம்பரில் ஒருநாள் போட்டியொன்றில் வெற்றியீட்டியதன் பின்னர் 09 வருடங்களாக அந்த மண்ணில் ஒருநாள் போட்டியொன்றில் கூட வெற்றியீட்டவில்லை. எனவே இலங்கை அணி நாளைய ஆட்டத்தில் ஆறுதல் வெற்றிபெற்று, 09 வருடங்களின் பின் நியூஸிலாந்து மண்ணில் ஒருநாள் போட்டியில் வெற்றியீட்டுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# இலங்கையை எதிர்கொள்ளும் ஆஸி. டெஸ்ட் குழாம் அறிவிப்பு




(அகீல் சிஹாப்)

இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆஸி. அணியின் வழமையான தலைவர் பேட் கம்மின்ஸுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த டெஸ்ட் தொடருக்கு ஆஸி. அணியின் தலைவராக ஸ்டீவ் ஸ்மித் பெயரிடப்பட்டுள்ளார்.

16 பேர் கொண்ட குறித்த குழாமில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ட்ரெவிஸ் ஹெட் அணியின் உப தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை தவறவிட்டுள்ளார்.

ஜோஷ் ஹேசில்வுட் உபாதை காரணமாக இந்தியாவுக்கு எதிரான பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரிலிருந்து விலகினார். அவருக்குப் பதிலாக அணியில் ஸ்கொட் போலாண்ட் சேர்க்கப்பட்டார். இந்த டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெறுகிறது. இலங்கை ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்பதால், அவுஸ்திரேலிய அணியில் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. குழாமில் மூத்த வீரர் நைதன் லயனுடன் சுழற்பந்துவீச்சாளர்களான டோட் முர்பி மற்றும் மேத்யூ குன்ஹிமேன் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரும் ஒரு ஒருநாள் போட்டியும் நடைபெறவுள்ளது. இலங்கை அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்துள்ள நிலையில் குறித்த இரு போட்டிகளையும் வெற்றிகொண்டால் புள்ளிப்பட்டியலில் மூன்றாமிடத்துக்கு முன்னேற முடியும்.

டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகிறது. இரண்டாவது போட்டி பெப்ரவரி 06ஆம் திகதி ஆரம்பமாகிறது. குறித்த இரு போட்டிகளும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் ஒருநாள் போட்டி பெப்ரவரி 13ஆம் திகதி ஹம்பாந்தோட்டையிலும் நடைபெறவுள்ளன.

**ஆஸி. டெஸ்ட் குழாம்**

ஸ்டீவ் ஸ்மித் (தலைவர்), சீன் அபோட், ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கூப்பர் கோனொலி, டிராவிஸ் ஹெட் (உப தலைவர்), ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, சாம் கோன்ஸ்டாஸ், மாட் குஹ்னெமன், மார்னஸ் லாபுசாக்னே, நாதன் லியோன், நாதன் மெக்ஸ்வீனி, டாட் மர்பி, மிட்செல் ஸ்டார்க், பியூ வெப்ஸ்டர்.

# தேசிய ஸ்குவாஷ் போட்டிகள் வெற்றிகரமாக நிறைவு

இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனம் 44ஆவது தடவையாக நடத்திய தேசிய ஸ்குவாஷ் போட்டி இரத்மலானை இலங்கை விமானப்படை ஸ்குவாஷ் வளாகத்தில் கடந்த 04ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை நடைபெற்றது.



புதிய ஆண்கள் மற்றும் பெண்கள், 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட வல்லுநர்கள், 55 வயதுக்கு மேற்பட்ட நிபுணர்கள், ஆண்கள் கேடயம் போட்டி, பெண்கள் மற்றும் ஆண்கள் ஓபன் ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் உள்ளூர் விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆடவர் திறந்த போட்டியில் ரவிந்து லக்சிரி தொடர்ந்து 12ஆவது தடவையாகவும் மகளிர் பிரிவில் சனித்மா சினலி சம்பியன் பட்டத்தை வென்றனர். தேசிய ஸ்குவாஷ் தெரிவுக்குழு உறுப்பினர் விங் கமாண்டர் நளின் ஜயதிலக மற்றும் வை.ஈ.டி.ஜ நிறுவனத்தின் பணிப்பாளர் திஷான் பாலசூரிய, தேசிய ஸ்குவாஷ் சம்மேளனத்தின் தலைவர் தம்மிக்க விஜேசுந்தர, இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனத்தின் துணைத் தலைவர் மற்றும் போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் குரூப் கேப்டன் எரந்த கிகனகே ஆகியோரும் பங்குபற்றினர்.

# விளையாட்டுத் துளிகள்

ஐ.சி.சியின் கடந்த டிசம்பர் மாதத்துக்கான சிறந்த வீர, வீராங்கனையை தெரிவு செய்வதற்கான மூவரடங்கிய பரிந்துரை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. அதன்படி ஆடவர் பரிந்துரைப் பட்டியலில் ஜஸ்பிரிட் பும்ரா, பெட் கம்மின்ஸ் மற்றும் டேன் பெட்டர்சன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மகளிர் பிரிவில் ஸ்மிருத்தி மந்தனா, அனாபெல் சதர்லண்ட் மற்றும் நொன்குலுலேக்கோ மலாபா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

---

நியூஸிலாந்தின் ஒக்லாந்து நகரில் நடைபெற்ற ஏ.எஸ்.பி. கிளாசிக் டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் ஜப்பானின் நவோமி ஒசாகா, டென்மார்க்கின் கிளாரா டவ்சன் உடன் மோதினார். போட்டியின் இரண்டாவது செட்டின் ஆரம்பத்தில் ஒசாகா காயம் காரணமாக திடீரென விலகுவதாக அறிவித்தார். இதையடுத்து, கிளாரா டவ்சன் சம்பியன் பட்டம் வென்றார்.

---

தென்னாபிரிக்காவுடனான 2ஆவது டெஸ்டில் 145 ரன்களை குவித்த பாகிஸ்தான் அணியின் தலைவர் ஷான் மசூத் தென்னாபிரிக்க மண்ணில் அதிக ரன்கள் அடித்த பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையை செய்துள்ளார். மேலும் தென்னாபிரிக்கா மண்ணில் அதிக ரன்கள் எடுத்த ஆசிய தலைவர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

---

08 அணிகள் பங்குபெறும் ரி10 டென்னிஸ் கிரிக்கெட் தொடரின் அறிமுக விழா அண்மையில் டுபாயில் நடைபெற்றது. இந்தப் போட்டிகள் மே 26 முதல் ஜூன் 05ஆம் திகதிவரை இந்தியாவில் நடைபெறவிருக்கின்றன. மும்பை மாவேரிக்ஸ், தில்லி டைனமிக்ஸ், பெங்களூரு பிளாஸ்டர்ஸ், கொல்கத்தா கிங்ஸ், சண்டிகர் சம்பியன்ஸ், ஹைதராபாத் ஹண்டர்ஸ், அகமதாபாத் அவேஞ்சர்ஸ், சென்னை சேலஞ்சர்ஸ் ஆகிய அணிகள் தொடரில் பங்கேற்கின்றன. போட்டிகள் நடைபெறும் இடங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பங்களாதேஷ் மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஹானாரா ஆலம் (வயது 31) மனநலப் பிரச்சினைகள் காரணமாக கிரிக்கெட்டிலிருந்து 02 மாத காலம் இடைவேளை எடுப்பதாக கூறியுள்ளார். இவரது முடிவை பங். கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. இவர் பங்களாதேஷ் அணிக்காக 52 ஒருநாள் மற்றும் 83 ரி20 போட்டிகளில் ஆடியுள்ளார்.

# 14 வருட சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்த கப்டில்




நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான மார்ட்டின் கப்டில் 14 வருட சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுப்பதாக அறிவித்துள்ளார். 38 வயதாகும் கப்டில் 23 சதங்கள் அடித்துள்ளார். 198 ஒருநாள் போட்டிகள், 122 ரி20 போட்டிகள், 47 டெஸ்ட் போட்டிகள் நியூஸிலாந்து அணிக்காக விளையாடியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் 7,346 ரன்களும் ரி20 போட்டிகளில் 3,531 ரன்களும் எடுத்துள்ளார்.

2009இல் அறிமுகமான கப்டில் கடைசியாக 2022இல் விளையாடினார். 2015 ஐ.சி.சி ஒருநாள் உலகக்கிண்ண தொடரில் 237 ரன்கள் அடித்து சாதனை படைத்தார். ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் நியூஸிலாந்து வீரரும் இவரே. 1,385 பவுண்டரிகள், 383 சிக்ஸர்கள் அடித்துள்ளார்.

கடந்த 2019 ஒருநாள் உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டத்தின் முக்கியமான கட்டத்தில் எம்.எஸ். டோனியை ரன் அவுட் செய்து மிகவும் புகழ்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் அணியுடன் இணையும் பாகிஸ்தான் நட்சத்திரம்

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தொடரில் பங்கேற்கும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக பாகிஸ்தானின் யூனிஸ் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.




08 அணிகள் கலந்து கொள்ளும் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடங்கி மார்ச் 09ஆம் திகதிவரை நடக்கிறது.

இந்த தொடருக்கான அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி குழு ஏயில் இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, பங்களாதேஷ் அணிகளும் குழு பியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம்பிடித்துள்ளன.

இந்த தொடரில் இடம்பெற்றுள்ள 08 அணிகளும் தங்களுடைய 15 பேர் கொண்ட அணியை எதிர்வரும் 12ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேண்டும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதில் வீரர்கள் உபாதை காரணமாக விலகினால் மாற்றம் செய்து கொள்ளலாம். வீரர்களை மாற்ற பெப்ரவரி 13ஆம் திகதிவரை அனுமதியுள்ளது.

இதுவரையில் இங்கிலாந்து மட்டுமே இந்த தொடருக்கான அணியை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த தொடருக்காக ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக பாகிஸ்தான் முன்னாள் வீரரான யூனிஸ் கான் நியமனம் செய்யப்பட்டுள்ளார். யூனிஸ் கான் பாகிஸ்தான் அணிக்காக 118 டெஸ்ட், 265 ஒருநாள் மற்றும் 25 ரி20 போட்டிகளில் ஆடியுள்ளார்.

# கோ கோ உலகக்கிண்ணம் திங்களன்று இந்தியாவில் ஆரம்பம்




முதல் தடவையாக நடைபெறவுள்ள கோ கோ விளையாட்டின் உலகக்கிண்ணத் தொடர் டெல்லியில் எதிர்வரும் 13 முதல் 19ஆம் திகதி வரை இந்திரா காந்தி மைதானத்தில் நடைபெறவுள்ளது. குறித்த உலகக்கிண்ண தொடரில் ஆடவர் பிரிவில் 20 அணிகளும் மகளிர் பிரிவில் 19 அணிகளும் களம் காண்கின்றன.

தற்போது வெளியாகியிருக்கும் போட்டிக்கான அட்டவணையின்படி, ஆடவர் பிரிவில் ஒரு பிரிவுக்கு 05 அணிகள் வீதம் 04 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. மகளிர் அணிகளும் 04 குழுக்காக பிரிக்கப்பட்டுள்ளன.

**ஆடவர் அணிகள்**

**குழு ஏ:** இந்தியா, நேபாளம், பெரு, பிரேஸில், பூட்டான்.

**குழு பி:** தென்னாபிரிக்கா, கானா, ஆர்ஜென்டீனா, நெதர்லாந்து, ஈரான்.

**குழு சி:** பங்களாதேஷ், இலங்கை, தென்கொரியா, அமெரிக்கா, போலந்து.

**குழு டி:** இங்கிலாந்து, ஜெர்மனி, மலேசியா, அவுஸ்திரேலியா, கென்யா.

**மகளிர் அணிகள்**

**குழு ஏ:** இந்தியா, ஈரான், மலேசியா, தென்கொரியா.

**குழு பி:** இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கென்யா, உகாண்டா, நெதர்லாந்து.

**குழு சி:** நேபாளம், பூடான், இலங்கை, ஜெர்மனி, பங்களாதேஷ்

**குழு டி:** தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, போலந்து, பெரு, இந்தோனேசியா.

# பச்சையரிசி-தேங்காய் விலைகளை குறையுங்கள்

## அரசாங்கத்திடம் இராதா எம்.பி. வலியுறுத்தல்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 13 ஆம் திகதி சீனாவுக்குச் சென்று அங்கு பொங்கல் பண்டிகையை கொண்டாடவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தைப்பொங்கல் தமிழர்களுக்கு முக்கியமானதாகும். ஆகவே, பச்சையரிசி, தேங்காய் ஆகியவற்றை குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சந்திரசேகரன் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்கு விதி மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

''நாட்டில் சமாதானம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் தைரியமாக முதலீடு செய்வார்கள்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன. ஆகவே, சமூகவிரோத செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம்.

அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்வரும் வாரம் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடவுள்ளோம்.



ஆனால், பச்சையரிசி மற்றும் தேங்காய்க்கான தட்டுப்பாடு காணப்படுகிறது. ஒரு கிலோகிராம் பச்சையரிசியை 280 அல்லது 290 ரூபா என்ற அடிப்படையில் வாங்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 13 ஆம் திகதி சீனாவுக்குச் சென்று அங்கு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தைப்பொங்கல் தமிழர்களுக்கு முக்கியமானதாகும். ஆகவே, பச்சையரிசி மற்றும் தேங்காய் ஆகியவற்றை குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சந்திரசேகரன் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைக்கப்பட வேண்டும் என்பதை பாரதியாரே பாடல் ஒன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடும். இலங்கை - இந்தியாவுக்கிடையில் 18 கிலோமீற்றர்தான் இடைவெளி. இதில் பாலம் அமைத்தால் நாம் காரிலேயே இந்தியாவுக்கு போய் வரலாம். அதேபோன்று அங்குள்ளவர்களும் இங்கு வந்து போவார்கள்.

இந்திய சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் இலங்கை வருகின்றனர் . இவ்வாறான நிலையில், இரு நாடுகளுக்குமிடையில் பாலம் அமைத்தால் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யலாம். எனவே, இலங்கை - இந்தியாவுக்கிடையில் பாலம் அமைப்பது தொடர்பில் இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்.

அதேவேளை, கிளங்கன் வைத்தியசாலையை அரசாங்கம் அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏற்கனவே இந்தியா இந்த வைத்தியசாலைக்கு உதவியுள்ளது. அரசாங்கத்தினால் இயலாவிட்டால் இந்தியாவிடம் உதவி கோரினால் அவர்கள் தாராளமாக அபிவிருத்தி செய்து தருவார்கள். ஏனெனில், இந்த வைத்தியசாலையை நம்பியே பல்லாயிரக்கணக்கான மக்கள் உள்ளனர். அத்துடன், அரசு தற்போது கிளீன் ஸ்ரீலங்கா என்ற பேரில் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன்மூலம் நடைபாதை வியாபாரிகள்,இவர்களை நம்பியுள்ள வர்த்தகர்கள் பாதிக்கப்படுகினறனர் . எனவே, இது தொடர்பில் அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

# அபிவிருத்திச் சபையின் அனுமதியை மீறிய தோட்ட அதிகாரி, உதவி அதிகாரியின் சேவை இடைநிறுத்தம்

எம்.ஏ.அமீனுல்லா

கண்டி, ஹந்தானை தோட்டத்தில் தேசிய தோட்ட அபிவிருத்திச் சபை ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கிய அனுமதியை முறைகேடாகப் பயன்படுத்தி அங்குள்ள அகற்றக்கூடாத 104 மரங்கள் வெட்டப்பட்டமை தொடர்பான விசாரணையின் பின்னர் மேற்படி தோட்ட அதிகாரி மற்றும் உதவித் தோட்ட அதிகாரி ஆகியோரின் சேவைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உக்கிச் சிதைவடைந்த மரங்களே இவ்வாறு வெட்டி அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெட்டப்பட்ட மரங்களின் பெறுமதியை மதிப்பிட்டு உரிய தொகையைச் செலுத்தத் தயாராக இருப்பதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் ஜயந்த திலகரத்ன தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில், 411 உக்கிய மற்றும் அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டதோடு அதற்கிணங்க மரங்களை மூன்று மாதங்களுக்குள் வெட்டி அகற்ற வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் குறித்த கால அவகாசம் நிறைவடைந்துள்ள நிலையில், காலத்தை நீடிக்காமல் நல்ல நிலையில் உள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டதாக எழுந்த பல முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த இரண்டு புலனாய்வுக் குழுக்கள் ஹந்தானை தோட்டத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இதன்போது, 104 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். குறித்த விடயம் தொடர்பில் ஹந்தானை பாதுகாப்பு அமைப்பின் தலைவர் அமித் சேனநாயக்க கூறுகையில்,

ஹந்தானை காட்டில் சுற்றாடல் பாதுகாப்பு வலயத்திலிருந்தும் பல மரங்கள் அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் தலாத்துஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், ஹந்தானை தோட்ட அதிகாரி தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படும்.

ஹந்தானை முகாமைத்துவக் குழுவின் சிபாரிசு பெறாமலேயே குறித்த மரங்களை வெட்டி அகற்றுவதற்கு ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை விலை மனு வழங்கியுள்ளது. இது தொடர்பாகவும் விசாரணை நடத்தப்படும்.

சுற்றாடல் பாதுகாப்பு வலயத்தில் நல்ல நிலையில் உள்ள மரங்கள் அனுமதியின்றி வெட்டப்பட்டுள்ளன.தோட்ட அதிகாரி மற்றும் உதவித் தோட்ட அதிகாரி ஆகியோரைத் தவிர வேறு சிலரும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

# பஸ் சாரதியைத் தாக்கிய நான்கு இளைஞர்கள் கைது

மஸ்கெலியா நிருபர்

ஹட்டனிலிருந்து மஸ்கெலியா- சாமிமலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் சாரதியை தாக்கிய நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் செவ்வாய்க்கிழமை (07) பிற்பகல் கைதுசெய்யப்பட்டதாக நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.எஸ்.பி.ராஜநாயக்க தெரிவித்தார்.

இரண்டு முச்சக்கரவண்டிகள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற குழுவொன்று செவ்வாய்க்கிழமை (07) மாலை 5 மணியளவில் ஹட்டன் - நோர்வூட் பிரதான வீதியில் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பஸ்ஸைப் பின்தொடர்ந்து முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பஸ்ஸைக் கடந்து சென்று வீதியின் குறுக்கே நிறுத்தி சாரதியைத் தாக்கியுள்ளனர்.

குறித்த முச்சக்கரவண்டி தனியார் பஸ்ஸுடன், திங்கட்கிழமை (06) மோதியதற்கே பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர் .

இதனையடுத்து முச்சக்கர வண்டியொன்றும் நான்கு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மற்றுமொரு சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளதாகவும் சந்தேக நபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான சாரதி டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20-25 வயதுடைய ஹட்டன் –டிக்கோயாவைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடற்படையினரின் பாரிய பொறுப்பாகும்

## கடற்படைத்தளபதி காஞ்சன தெரிவிப்பு

எம்.ஏ.அமீனுல்லா

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது கடற்படையினரின் பொறுப்பாகுமென கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொட தெரிவித்தார்.

கண்டிக்கு நேற்று முன்தினம் (08) விஜயம் மேற்கொண்டிருந்த கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொட மல்வத்து பீடாதிபதி வண. திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி பீடாதிபதி வண. வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் பின்னர் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் போதைப்பொருள் கடத்துவதைத் தடுப்பதே தற்போது மிகப்பாரிய சவாலாக உள்ளது. அதற்காக கடற்படையினர் பாடுபட்டு வருகின்றனர்.

கடல் வழிகளூடாக இலங்கைக்குள் போதைப்பொருள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக கடற்படையினர் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

போதைப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்வதை கடத்தல்காரர்கள் நிறுத்தாததால் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

சர்வதேச சட்டத்துக்கப்பாற்பட்ட எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளையும் தடுக்க கடற்படை ஈடுபடும். உள்ளூர் மீனவர்கள் எவ்வித இடையூறுமின்றி இலங்கையில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்றார்.

# கண்டி தேசிய வைத்தியசாலையில் அளவுக்கதிகமான நோயாளர்கள்

ஜே.எம்.ஹாபீஸ்

கண்டி தேசிய வைத்தியசாலையில் சில வார்ட்டுகளில் நோயாளர் எண்ணிக்கை அளவுக்கதிகமாகியுள்ளதுடன் போதியளவு படுக்கை வசதியின்றி நோயாளர் நடைபாதையிலும் தூங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது கண்டிப் பகுதியில் நிலவும் குளிர் காலநிலை காரணமாக தொய்வு, சளித் தொல்லை, தடிமன், காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்படும் அதிக நோயாளர்கள் வார்ட்டுகளுக்கு அனுமதிக்கப்படுவதே இவ்வாறு நெரிசலுக்கு காரணமெனக் கூறப்படுகிறது.

இருப்பினும், இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பலர் தெரிவித்தனர்.

# வெளிவிவகார அமைச்சருடன் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு



பு.கஜிந்தன்

வெளிநாட்டில் வாழுகின்ற தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வது தொடர்பாக தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வைத்தியர் பவானந்தராஜா ஆகியோர் வெளிநாட்டு விவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடலொன்றை நேற்று முன்தினம் (08) பாராளுமன்ற அலுவலகத்தில் நடத்தினர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டைகளை அமைப்பதற்காக காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் ஆர்வமுள்ளவர்கள் இலங்கை முதலீட்டுச் சபையினூடாக தங்கள் செயற்றிட்டங்களை முன்வைக்க முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று, நீண்ட காலமாகப் புலம்பெயர்ந்து நாட்டுக்கு வரமுடியாதிருக்கும் தமிழர்கள் தாங்கள் நாட்டுக்கு வர விரும்புவது தொடர்பான ஆர்வத்தை பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அமைச்சருக்குத் தெரியப்படுத்தினார்.

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்பரப்பில் கைது!

பு.கஜிந்தன்



இலங்கைக் கடற்பரப்பினுள் நேற்று முன்தினம் இரவு (08) அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மீன்பிடிப் படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் - காரைநகர், கோவளம் கலங்கரைவிளக்கத்தில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின்போது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடிப் படகைக் கைப்பற்றியதுடன், 10 இந்திய மீனவர்களையும் கைதுசெய்தனர்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளின் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைக் கட்டுப்படுத்த கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் இலங்கைக் கடற்பரப்பில் வழக்கமான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி காரைநகர் கோவளம் கலங்கரைவிளக்கத்துக்குப்பால் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்டறிந்த கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையினர் இந்திய மீன்பிடிப் படகுகளைக் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் பொறுப்பேற்பு



பு.கஜிந்தன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குப் புதிய பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட ரட்ணகுமார் நிசாந்தன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராகப் பணியாற்றிய இவர், ஜனாதிபதி செயலகத்தில் உலக உணவுத்திட்டப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு பல்வேறு தேவைகளைக் கொண்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பொதுமக்களின் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் இருந்த அரசியல் தலையீடுகள், ஊழல்கள் காரணமாக மக்கள் தமது தேவைகளையும் முழுமையான சேவையையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், ஊழலற்ற நேர்மையான அரச சேவை வழங்கக்கூடிய பிரதேச செயலாளரை நியமித்துத் தருமாறு பிரதேச மக்களால் ஜனாதிபதி உள்ளிட்ட பல தரப்பினருக்கு எழுத்து மூலமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே குறித்த பிரதேச செயலகத்துக்குப் புதிய பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசிக் கம்பத்துடன் வேன் மோதி விபத்து



சிவகுமார் திவியா

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் தொலைபேசிக் கம்பத்துடன் வேன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

பண்டாரிக்குளம் பகுதியிலிருந்து ரயில் நிலைய வீதி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேன் பண்டாரிக்குளம் அம்மன் கோயிலை அண்மித்த பகுதியில் கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகேயிருந்த தொலைபேசி கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ்விபத்தில் வாகனம் மற்றும் தொலைபேசி கம்பம் என்பன பகுதியளவில் சேதமடைந்தன. வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித உயிராபத்துகளும் நிகழவில்லை.

# யாழில் விரைந்து நடவடிக்கை எடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## மக்கள் பாராட்டு!



பு.கஜிந்தன்

அராலி பாலத்திலிருந்து அராலி துறைக்குச் செல்லும் வீதியிலுள்ள மதகொன்று பாரிய சேதமடைந்து குழியும் ஏற்பட்ட நிலையில் காணப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான குறித்த வீதி, 789 வழித்தட பஸ் பயணிக்கும் பிரதான வீதியாகும்.

இந்நிலையில், இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதுடன், இந்த வீதி குறித்து ஊடகங்களில் செய்திகளும் வெளியாகியிருந்தன.

இவ்வாறான பின்னணியில் விரைந்து செயற்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குறித்த பாதையை சீரமைத்து பாதுகாப்பான பயணத்தையும் உறுதிப்படுத்தினர்.

இவ்வாறு விரைந்து நடவடிக்கை எடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மக்கள் தமது பாராட்டைத் தெரிவித்து வருகின்றனர்.



# லொஸ்ஏஞ்சல்ஸை கபளீகரம் செய்த காட்டுத் தீ

★ ஐவர் உயிரிழப்பு; 1,37,000 பேர் வெளியேற்றம்
★ புகை - தூசி பாதிப்பில் 1.70 கோடி பேர்
★ அச்சுறுத்தலில் ஹொலிவுட் அடையாளச் சின்னங்கள்

















அமெரிக்காவின் கலிபோர்னியாவில் பரவிய காட்டுத் தீ லொஸ்ஏஞ்சல்ஸையும் கபளீகரம் செய்துள்ள நிலையில், காட்டுத் தீயில் சிக்கி 5இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். காட்டுத் தீ காரணமாக 1,37,000 பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். காட்டுத் தீயை கட்டுக்குள் கொண்டுவர தீயணைப்புப் படையினர் போராடிவருகின்றனர்.

**கலிபோர்னியா பேரிடர்**

இந்நிலையில், காட்டுத் தீயால் கலிபோர்னியாவில் பேரிடர் ஏற்பட்டுள்ளது என பைடன் அறிவித்துள்ளார். இதனை வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்தி தெரிவிக்கின்றது.

இதனால், காட்டுத் தீயால் பாதிக்கப்பட்ட மாகாணம், பழங்குடியின பகுதிகள் மற்றும் உள்ளூர்ப் பகுதிகளில் மீட்பு முயற்சிகளை மேற்கொள்வதற்கான அரசின் உதவியை வழங்குவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் பரவிய காட்டுத் தீ லொஸ்ஏஞ்சல்ஸ் மாகாணத்தைக் கபளீகரம் செய்துள்ளது. அங்கு வீசும் வெப்பக்காற்று மற்றும் வறண்ட சூழ்நிலைகளால் தூண்டப்பட்ட காட்டுத் தீ, ஏற்கனவே சாண்டா மோனிகா மற்றும் மாலிபு இடையே 1,262 ஏக்கர் பகுதிகளை எரித்துவிட்டது. இந்த காட்டுத் தீயால் மேலும் அழிவு அபாயத்தை அதிகரிக்கும் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்தனர்.

இந்நிலையில், காட்டுத் தீயால் புகை மண்டலம் பரவி காணப்படுகிறது. வெப்பக்காற்றும் வீசி வருகிறது. இதனால், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் பாதிப்புக்குள்ளாகுமென அஞ்சப்படுகிறது.

**அச்சுறுத்தலில் ஹொலிவுட் அடையாளச் சின்னங்கள்**

காட்டுத் தீ குறித்து தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவிக்கையில், ''ஹொலிவுட் ஹில்ஸில் 'சன்செட் தீ' என்று அழைக்கப்படும் ஒரு புதிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

'சன்செட்' தீயின் தற்போதைய அளவு 20 ஏக்கராக அதிகரித்து ரன்யான் கேன்யன் மற்றும் வாட்டில்ஸ் பூங்காவுக்கிடையில் எரிகிறது.

ஹொலிவுட் சின்னத்தைத் தவிர, ஆண்டுதோறும் ஒஸ்கார் விருது வழங்கும் விழா நடைபெறும் டால்பி தியேட்டரும் சன்செட் தீயால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

ஹொலிவுட் பவுல் வெளிப்புற ஆம்பி தியேட்டர் மற்றும் 'ஹொலிவுட் வோக் ஒவ் பேம்' உள்ளிட்ட லொஸ்ஏஞ்சல்ஸின் பிற அடையாளங்களும் ஆபத்தான நிலையிலுள்ளன.

புதிய தீ விபத்து காரணமாக பிரபலங்களின் குடியிருப்புகள் அமைந்துள்ள ஹொலிவுட் பவுல்வர்ட்டுக்கு தெற்கே லோரல் கேன்யன் பவுல்வர்ட் மற்றும் முல்ஹோலண்ட் டிரைவின் உள்ளிட்ட பகுதிகளில் வசிப்போரை கட்டாயமாக வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

**1.70 கோடி பேர் புகை - தூசி அச்சுறுத்தலில்**

தெற்கு கலிபோர்னியா முழுவதும் வசிக்கும் சுமார் ஒரு கோடியே 70 இலட்சம் பேர் புகை மற்றும் தூசி எச்சரிக்கையின் கீழ் உள்ளனர்.

**15 இலட்சம் பேர் மின்சாரமின்றி தவிப்பு**

நேற்றுமுன்தினம் பிற்பகல் நிலைவரப்படி, 15 இலட்சத்துக்கும் அதிகமானோர் மின்சாரமின்றி தவித்து வருவதாக PowerOutage.us தெரிவித்துள்ளது. அதேபோல், வெண்டியுரா கவுன்டியில் சுமார் 3,34,000 மக்களும், லொஸ்ஏஞ்சல்ஸ் கவுன்டியில் 9,57,000 பேரும் மின்சாரமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

லொஸ்ஏஞ்சல்ஸில் தீயணைப்பு வீரர்களும் தண்ணீர் பற்றாக்குறையால் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். நீச்சல் குளங்கள் மற்றும் குளங்களிலிருந்து தண்ணீரை எடுத்து தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**வீடுகளை இழந்த பிரபலங்கள்**

நடிகர்கள் பில்லி கிரிஸ்டல், மாண்டி மூர், ஜேமி லீ கர்டிஸ் மற்றும் பாரிஸ் ஹில்டன் உட்பட பல ஹொலிவுட் பிரபலங்கள், காட்டுத் தீ காரணமாக தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். அதேநேரத்தில் ஆடம் சாண்ட்லர், பென் அப்லெக், டாம் ஹாங்க்ஸ் மற்றும் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஆகியோரும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடியிருப்புகளைக் கொண்டுள்ளனர்.

-இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (07) பொலிசேட்ஸில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து கலிபோர்னியா மாநில ஆளுநர் அவசரநிலையை அறிவித்திருந்தார்.

**ஜோ பைடன் மீது ட்ரம்ப் தாக்கு**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் கலிபோர்னியா ஆளுநரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர் என்று புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் சாடியுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி பதவியேற்கவுள்ள ட்ரம்ப், தற்போதைய காட்டுத் தீ பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான ஆதாரங்களின்றி ஜோ பைடன் தன்னை விட்டுச்செல்வதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது சமூக வலைத்தளமான ட்ரூத் சோசியலில், ''தீயணைப்பு இயந்திரங்களில் தண்ணீர் இல்லை, FEMAவில் பணம் இல்லை. இதைத்தான் ஜோ பைடன் எனக்கு விட்டுச்செல்கிறார். நன்றி ஜோ!'' எனத் தெரிவித்துள்ளார்.

# திருப்பதி கூட்ட நெரிசலில் சிக்கி அறுவர் உயிரிழப்பு; 30 பேர் காயம்



திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி அறுவர் உயிரிழந்துள்ளதுடன், 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில், சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவின் திருப்பதியில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற திருமலை ஏழுமலையான் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வைகுண்ட துவார தரிசனத்துக்கான இலவச பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்படுமென திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் அறிவித்திருந்தது. இதற்காக பல்வேறு இடங்களில் 90 பற்றுச்சீட்டு பெறும் இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பற்றுச்சீட்டு நேற்று (09) காலை
5 மணி முதல் விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் (08) இரவு இலவச தரிசன டிக்கெட்டைப் பெற ஆயிரக்கணக்கான பக்தர்கள் பற்றுச்சீட்டு பெறும் இடங்களில் திரண்டிருந்தனர். அப்போது விஷ்ணு நிவாசம், பைரகிபட்டேடா, ராமச்சந்திர புஷ்கரிணி உள்ளிட்ட பற்றுச்சீட்டு பெறும் இடங்களில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் தவித்துள்ளனர்.

அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக மேற்கொள்ளப்படவில்லையெனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்ததுடன் சுமார் 30இற்கும் மேற்பட்டோருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர்கள் திருப்பதியிலுள்ள அரச வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**பிரதமர் மோடி இரங்கல்:**

“திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலை அறிந்து நான் மிகுந்த மனவேதனையடைந்தேன். எனது எண்ணமெல்லாம் தங்கள் நெருங்கிய உறவுகளை இழந்து வாடுபவர்களுடன் உள்ளது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆந்திர அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது” - என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி ஆகியோர் இரங்கல் தெ.ரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் போதைப்பொருள் கடத்தல் பின்னணியில் இலங்கையைச் சேர்ந்த பிரபல புள்ளி கஞ்சிபானி இம்ரான்



கஞ்சிபானி இம்ரான்



ஜோன் ஒக்காபர்

தமிழகத்தில் போதைப்பொருள் கடத்தல் பின்னணியில் இலங்கையைச் சேர்ந்த கடத்தல் மன்னன் கஞ்சிபானி இம்ரான் இருப்பது தெரியவந்துள்ளது.

சென்னை, அரும்பாக்கம் பொலிஸ் தனிப்படையினர் மற்றும் போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு பொலிஸார் இணைந்து, மெத்ஆம்பெட்டமைன் (Methamphetamine) கடத்தல் கும்பலைச் சேர்ந்த 15 பேரை சமீபத்தில் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து 5 நாட்டுத் துப்பாக்கிகள், 79 துப்பாக்கிக் குண்டுகள் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில், தூத்துக்குடியைச் சேர்ந்த கூலிப்படை கும்பல் தலைவன் தம்பிராஜா (வயது 60), அவரது கூட்டாளி சத்தியசீலன் ஆகியோர் இரு தினங்களுக்கு முன்பு கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ.50 கோடி மதிப்புள்ள மெத்தம்பெட்டமைன், 5 துப்பாக்கிகள், 79 தோட்டாக்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தக் கும்பலுக்குத் தலைவனாக செயற்பட்ட தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜோன் ஒக்காபரை பொலிஸார் புதுடில்லியில் கடந்த 03ஆம் திகதி கைதுசெய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மியன்மாரிலிருந்து மெத்தம்பெட்டமைன், கெட்டமைன் போன்ற போதைப்பொருட்கள் டில்லிக்கு கடத்தப்பட்டு அங்கிருந்து அவை தமிழகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, தமிழகத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்பட்டமை தெரியவந்தது.

இக்கும்பல், சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த கஞ்சிபானி இம்ரானின் உத்தரவுப்படி செயற்பட்டிருப்பதும், இலங்கையைச் சேர்ந்த கஞ்சிபாணி இம்ரான் இரு ஆண்டுகளாக தலைமறைவாக இருப்பதும், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் போதைப்பொருளை கடத்துவதும் தெரியவந்தது.

கஞ்சிபானி இம்ரான் கேட்டதன்பேரிலேயே நாட்டுத் துப்பாக்கிகளையும் அந்தக் கும்பல் கடத்தியிருப்பது தெரியவந்துள்ளது. கஞ்சிபானி இம்ரான் நெருங்கிய தொடர்பிலிருந்த இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களை பொலிஸார் தங்களது காவலில் எடுத்து விசாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். அதேநேரத்தில், கஞ்சிபானி இம்ரான் இந்தியாவில் தலைமறைவாக இருக்கிறாரா என்றும் க்யூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சென்னை அசோக் நகர் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஜேம்ஸ், அயனாவரம் பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர் பரணி மற்றும் மத்திய போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவில் (என்சிபி) பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான ஆனந்த் மற்றும் சபீர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக வண்ணாரப்பேட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அருள்பாண்டியன் (வயது 30) என்பவரை கைதுசெய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7